# சந்தேசய

2005 ஜனவரி – ஜூன்

## சுனாமியின் போர்வையில் அரசியல் விளையாட்டு



# சந்தேசய
## (செய்தி)

2005 ஜனவரி– ஜூன்

விலாசம்: தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கம்
இல: 1151/58எ,
4 வது ஒழுங்கை
கோட்டே வீதி
ராஜகிரி.
தொ. பே. 011 – 2865534
தொலைநகல்: 011 – 4407663
மின்னஞ்சல்: monlar@sltnet.lk
இணையம்: http://www.geocities.com/monlarslk

ஆசிரியர்
செ. இம்மானுவேல்

மொழியாக்கம்
செ. இம்மானுவேல்
மொஹமட் ராஜிக்

வெளியீடு
தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு நிறுவனம்

அச்சகம்
நியோ கிரப்பிக்ஸ்
143,
உடஹமுல்ல புகையிரத வீதி,
கங்கொடவில,
நுகேகொட.
தொ. பே. 0114300372


தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு நிறுவனம் – தொடர்ச்சி....

# செயற்படும் விதம்

## இயக்கத்தின் செயற்பாடுகள் மூன்று கட்டங்களாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

### முதல் கட்டம் – அறிவு மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

தேசிய ரீதியில் மேற்கூறப்பட்ட விதத்தில் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பவர்களது போன்றே வேறும் நாடுகளது அறிவு மற்றும் அனுபவங்களை கூடிய மட்டிலும் ஒன்று திரட்டிக் கொள்ளுவதற்கும் அவற்றை பகிர்ந்தளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்ற அதே நேரம் இன்று நடைபெற்று வருகின்ற உலகமயமாக்கல், வர்த்தக சந்தைகளை விரிவு படுத்துதல், உலக வங்கியின் பாதிப்புக்கள் மற்றும் பன்நாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் போன்றே அவற்றுக்கு முகங்கொடுக்கக் கூடிய விதம் குறித்து கலந்துரையாடலையும், நடைமுறை சாத்தியமான உபாயோகத்தையும் கட்டியெழுப்புவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பாதிப்புக்களின் ஊடாக இலங்கையின் பொருளாதார அரசியல் துறைகளில் பாதிப்புக்களை உண்டு பண்ணக் கூடிய மக்கள் விருப்பினை கட்டியெழுப்புதற்காக ஒத்துழைப்பு நல்குவது இதனது நோக்கமாகும்.

### இரண்டாம் கட்டம் – நடைமுறை சாத்தியமான தீர்வுகளை கட்டியெழுப்புவதற்காக.

மேற் கூறப்பட்ட சமூக மாற்றத்திற்கு உரித்தான நீண்ட காலத்தைய நிலைப்பாட்டினை கட்டியெழுப்புவதற்காக செயற்படுகின்ற அதே நேரம், இன்று வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற மக்களின் வறிய நிலை, உணவுத் தட்டுப்பாடு, பட்டினி மற்றும் போஷாக்கின்மை, கிராமிய பொருளாதார வீழ்ச்சி, தொழிலின்மை, சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு அன்றாடம் வாழ்வில் பலத்தினை பெற்றுத்தரும் நடைமுறைப்படுத்தக் கூடிய சூழல் விவசாயத்திற்கு உரித்தான நடைமுறை சாத்தியமான வேலைத் திட்டமொன்றுக்குத் தேவையான பயிற்சி வழிகாட்டல் மற்றும் செயற்பாட்டிற்கான பணிகளில் இயக்கம் ஈடுபட்டு வருகிறது. நச்சு, விஷமற்ற குறைந்த செலவிலான நெற்பயிர்ச் செய்கை, வீட்டுத் தோட்டம் மற்றும் விவசாய பயிர்ச் செய்கை மூலமாக இலாபகரமானதும் கூடிய பயன் பெறத்தக்கதுமான விவசாய முறையினை பரவலாக்குவது முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

### மூன்றாம் கட்டம் – கொள்கை மாற்றம் தொடர்பாக

மேற் கூறிய இரு கட்டங்களிலான பணிகளின் அனுபவங்களின் மூலமாக, நிலவிவரும் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கக் கூடிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மக்கள் இயக்கங்கள், குழுக்களை அக்கறை கொள்ளச் செய்வதும், அதற்கு ஏதுவான வகையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கொள்கை ரீதியிலான மாற்றங்களை உண்டுபண்ணும் விதத்தில் உரிய அரச நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு முன்வைக்கும், பலவந்தப்படுத்தும் செயல் முறை ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களை உண்டுபண்ண ஒத்துழைப்பு வழங்குவதானது பொது உபாய முறையின் ஒரு பிரிவாகும்.

### இயக்கத்தின் தன்மை

தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கமானது பாரியதொரு இயக்கமோ அன்றி நிறுவனமோ அல்ல. மேற் கூறப்பட்ட விடயங்களை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துவதானது இவ்வாறானதொரு இயக்கத்திற்கோ அல்லது இயக்கங்கள் சிலவற்றுக்கோ செய்ய முடியாததாகும். ஆகவே இது பல மக்கள் இயக்கங்கள் மற்றும் குழுக்களினால் ஒன்றிணைந்து கட்டியெழுப்பக் கூடிய வேலைத்திட்டமாகுமென நம்பி, அவ்வாறான அமைப்பின் மூலமாக மேற் கூறிய வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களினை கட்டியெழுப்பும் பயிற்சியிலும் கலந்துரையாடல்களிலும் இயக்கம் ஈடுபட்டு வருகின்றது.

### இயக்க வியூகமும் திட்டங்களும்

இயக்கம் 1999 ஏப்ரல் மாதம் தேசிய மாநாட்டின் போது அங்கீகரிக்கப்பட்ட யாப்பின் பிரகாரம் செயற்பட்டு வருகின்றது. அன்றைய தினம் இயக்கக் கோட்பாடு மற்றும் கொள்கைகளுக்கு இணங்க உறுப்புரிமை வகிப்பதற்கு இணக்கம் தெரிவித்த பல இயக்கங்களுடன் கூடிய மாசபை கூட்டப்பட்டது. விசேட அனுசரணையின் படி ஏராளமான நபர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். இதன் போது நியமிக்கப்பட்ட நிறைவேற்றுச் சபை மூலமாக கொள்கைகள் நிர்மாணிக்கப்படுவதுடன் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேண்டி காரியக் கமிட்டியொன்றும், வழி நடாத்தும் கமிட்டியொன்றும் உள்ளன. இந்த இயக்க வியூகத்தின் மூலமாக இயக்க நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கும், மக்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் சிறப்பு வாய்ந்த அவர்களது ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற அதே நேரம் எல்லைகளைக் கடந்து சென்று கட்டாயமாக மக்களது ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளுவதும் மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக வேண்டி பரவலான மக்கள் அபிப்பிராயத்தினையும் செயற்பாடுகளையும் கட்டியெழுப்புவதும் இயக்கத்தின் முயற்சியாகும்.

# அரசு சுனாமியின் போர்வையில் நீரை விற்பதற்கு ஆயத்தமாகின்றது

2004 டிசம்பர் 26ல் இடம் பெற்ற சுனாமிப் பேரழிவானது பாரிய உயிர் உடமை அழிவுகளை இலங்கையில் ஏற்படுத்தி விட்டது. நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்குப் கரையோரங்களை சுனாமிப் பேரலை அடித்துச் சென்றதினால் சுமார் 42.000 பேர் வரை பலியாகினர். சுமார் 15.000 கோடி ரூபா வரையான சொத்தழிவுகள் ஏற்பட்டன. சுமார் 10 இலட்சம் மக்கள் அகதிகளாகினர். தமது உறவினர்களை இழந்தவர்கள் இன்னும் உளரீதியான அதிர்ச்சிகளில் இருந்து மீளாதவர்களாகவே இருந்து வருகின்றனர். இந்த சுனாமிப் பேரழிவில் ஆழ்ந்து அவதானிக்க வேண்டிய விடயம் யாதெனில் அழிவுகளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளான மக்களில் ஏகப் பெரும்பான்மையோர் சாதாரண உழைக்கும் மக்களான மீனவர், சிறுதொழில் புரிவோர் மற்றும் விவசாயிகள் போன்றோராவர். சுனாமிப் பேரழிவு இடம் பெற்று நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்சி பெறுவதற்குரிய மாற்று செயற்பாடுகள் எதையும் அரசாங்கம் அக்கரையுடனோ பொறுப்புடனோ இதுவரை செய்து கொள்ளவில்லை என்பது முக்கியமானதாகும்.



> கரையோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டுள்ள இவ்வனர்த்தத்தின் மத்தியிலும் கூட, நீரைத் தனியார்மயமாக்குதலைச் சட்டமாக்குவதற்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்த காலவரையறைகளை அவ்வாறே பின்பற்ற வேண்டுமென்று ஆசிய அபிவிருத்தி வங்கி தற்போது வற்புறுத்துகின்றது.

சுனாமிக்குப் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசின் மூலம் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம் 2005 ஜனவரி 15 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. இத் திட்டத்தில் தனியார் துறை ஊடாக நீரைச் சந்தைப்படுத்தும் செயற்பாட்டிற்கு உதவும் பொருட்டு நீர் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான பாரிய வேலைத் திட்டமொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

நீர் விநியோக சேவையை தனியார் துறைக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற நிபந்தனையின் கீழ் இவ்வாறான நீர் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நிதி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி சில காலங்களுக்கு முன்னிருந்தே உடன் பட்டிருந்தது. கரையோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டுள்ள இவ்வனர்த்தத்தின் மத்தியிலும் கூட, நீரைத் தனியார்மயமாக்குதலைச் சட்டமாக்குவதற்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்த காலவரையறைகளை அவ்வாறே பின்பற்ற வேண்டுமென்று ஆசிய அபிவிருத்தி வங்கி தற்போது வற்புறுத்துகின்றது.

இந்த ஆணைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசின் மூலம் 2004 டிசம்பர் 30 ஆம் திகதி நீர் வளக் கொள்கை மற்றும் நீர்ச்

சட்ட மூலத்திற்கு கெபினட் அங்கிகாரம் வழங்கப்பட்டது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் *நீர்ப் பொறி*

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நீர் நிபுணத்துவர் தோமஸ் பினெல்லாவின் 2004 ஜூன் மாத இலங்கை விஜத்தின் போது ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அரசாங்த்திற்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2005 மார்ச் 18 ஆம் திகதிக்கு முன்னர் நீர் வளச் சட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அவ்வாறு செய்யத் தவறின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தள்ளுபடியாகுமென்றும் நிபந்தனை போடப்பட்டது. அதே போன்று 2005 மே மாதம் 13 ஆம் திகதியாகும் போது சட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நிர்ப்பந்திக்கப்பட்டது.

1996 இல் முதன் முதலில் நீரைத் தனியார்மயமாக்கும் யோசனை உலக வங்கியினால் முன்வைக்கப்பட்ட தருணத்திலிருந்து இலங்கை மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். நீரைத் தனியார்மயமாக்கும் சட்டம் மற்றும் நிறுவனங்களை அமைப்பதற்கு முயற்சி எடுத்த அனைத்து அரசுகளுக்கும் மாபெரும் மக்கள் எதிர்ப்புகள் மத்தியில் அத் திட்டங்களை வாபஸ் பெற நேரிட்டது. அனைத்து அரசுகளும் நீரை தனியார்மயமாக்கவோ அல்லது விற்கவோ மாட்டோமென்று உறுதியளித்த போதிலும், அவ்வுறுதி மொழிகளை மீண்டும் செயல்படுத்த தவறிவிட்டன.

சுனாமியின் காரணமாக பாரிய வெளிநாட்டு நிதி உதவிகள் நாட்டிற்கு கிடைத்தவண்ணம் இருக்கின்றன. பாதிப்புக்குள்ளான மக்களுக்கு அவசர நிவாரண சேவைகளை வழங்குவதற்கும் அவர்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும் கட்டாயமாக அவற்றைப் பாவிக்க வேண்டும். ஆனால் அரசின் மூலம் தயாரிக்கப்பட்ட திட்டத்தில், சர்வதேச நிதி நிறுவனத்துடன் ஏற்கனவே உடன்பட்டிருந்த திட்டத்தை செயல்படுத்துவதில் மேலதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது..

சுனாமியின் பின், தற்போது இருக்கின்ற நீர் விநியோக தொகுதியை புனரமைப்பு செய்தல் மற்றும் புதிய நீர் விநியோகத் தொகுதி நிர்மாண திட்டங்கள் அடங்கிய நீர் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற திட்டமைப்பின் மூலம் இது மிகத் தெளிவாகின்றது.

### திட்டமிடப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

| | அ.டொ. மில்லியன் |
|---|---|
| கிணறுகள் கட்டுதல் | 6 |
| குழாய்க் கிணறுகள் கட்டுதல் | 10 |
| நீர் விநியோகத் தொகுதி நிர்மாணம் – | |
| – ஹம்பாந்தோட்ட | 12 |
| – கொழும்பு, கம்பஹ மற்றும் புத்தளம் | 6 |
| – மாத்தரை | 10 |
| – அம்பாரை | 15 |
| – திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு | 10 |
| – காலி | 10 |
| – களுத்துரை | 6 |
| – யாழ்ப்பானம் மற்றும் முல்லைத்தீவு | 15 |
| தேகாரோக்கிய வசதிகளுக்காக | 50 |
| மொத்தம் | 150 |

இந்த உட்கட்டமைப்பு வசதிகள் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவுவதற்காகவா அல்லாவிட்டால் இலங்கையில் நீர் விற்பனைக்காக வெளிநாட்டு நீர்க் கொம்பனிகளை வரவழைப்பதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காகவா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

உதாரணமாக, கொழும்பு மற்றும் கம்பஹ போன்ற பாதிப்புக்குள்ளாகாத மாவட்டங்களும் இந்த திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உத்தியோக பூர்வ கணக்கெடுப்பின் பிரகாரம், இலங்கையில் 1.2 மில்லியன் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 15 டொலர்களுக்குக் குறைவாகும். சிறு விவசாயிகள் அனைவரும்போல் கொடிய வறுமை மற்றும் கடன் சுமையில் துயருருகின்றார்கள். சுனாமியின் காரணமாக வாழ்க்கை முழுமையாக அழிந்துவிட்டது. எனவே வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்க நேரிட்டிருக்கின்ற மீனவ மக்களில் பெரும்பாலானோர் கொடிய வறுமையில் வாடுபவர்களாவர். கொழும்பு நகர சனத்தொகையில் 52% த்தினர் முடுக்குகளிலும் சிறு குடிசைகளிலும் வாழ்கின்றார்கள். பாரிய நீர் நிறுவனங்களின் மூலம் விதிக்கப்படும் விலைக்கு நீரை விலை கொடுத்து வாங்க இம் மக்களுக்கு முடியுமா?

நாட்டின் வறிய மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து விட்டு வெளிநாட்டு கொம்பனியாளர்களுக்கு ஏற்றுமதி மற்றும் ஏனைய இலாபம் சம்பாதிக்கும் செயல்களுக்காக தேசிய நீர் வளத்தை ஒப்படைப்பதற்கு வழிவகுக்கும் நீர் தனியார்மயமாக்கல் மற்றும் புதிய சட்டமூலத்தின் அபாயம் மிகவும் பாரதூரமானதாகும்.

சர்வதேச ரீதியில் திட்டமிட்டு பலாத்காரமாக சுமத்தப்படும் நீர் தனியார்மய வர்த்தகத் திட்டம் இலங்கையில் மாபெரும் சமூக அனர்த்தத்தை உண்டுபண்ணுவதோடு பாரம்பரிய நீர் முகாமைத்துவ முறைகளில் அழிவுகளையும் ஏற்படுத்தும். இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட பெரும் அழிவான இச் சுனாமியைப் பயன்படுத்தி அதைவிட மாபெரும் அழிவை ஏற்படுத்த மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும்.

நீரைத் தனியார்மயபடுத்தலுக்கு எதிராக உலகலாவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட சகலரையும் இச் சந்தர்ப்பத்தில் எம்மோடு ஒன்றிணையும்படி அழைப்பு விடுக்கின்றோம்.

## இலங்கையினுள் *அமெரிக்கா*

அமெரிக்காவின் முன்னைய ஜனாதிபதிகள் இருவரான ஜோர்ஜ் புஸ் மற்றும் பில் கிலிங்டன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மேற்கொள்ளும் விஜயத்தின் ஒரு கட்டமாக கடந்த பெப்ரவரி 20,21 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வந்தனர்.

பாதிப்புள்ளானவர்களுக்கு உதவுவதற்காவும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகவும் தனிப்பட்ட ரீதியில் நிதி திரட்டும் அவர்களின் முயற்சி மிக மதிப்பிற்குறியதெனப் போற்றுகின்றோம். அமெரிக்க மக்கள் இதுவரை 700 மில்லியன் டோலர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர்களின் ஒத்துழைப்பு இலங்கைக்கு அத்தியாவசியமாகும்.


அவர்களின் விஜயத்துடன் தொடர்புபட்ட, இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடு தொடர்பாக தேசிய வளங்களையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஒன்றியம் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றது.

சுனாமியின் பின்னர் அவசர நிவாரண சேவைகளை வழங்குவதற்காக அமெரிக்கப் படையினர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். அவசர சேவைகள் முடிவுற்றிருந்த போதிலும் அவர்களில் சிலர் இன்னும் இலங்கையில் தங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது. உலகின் ஏனைய நாடுகளில் விஷேடமாக அண்மையில் ஈராக் மற்றும் அப்கானிஸ்தானில் அமெரிக்க அரசின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது, இந்த ஈடுபாடு இரண்டு காரணங்களின்

நிமித்தம் பாதிப்பானதென தென்படுகின்றது. முதலாவது, அமெரிக்காவின் முன்னைய இராஜாங்க செயலாளர் கொலின் பவல் வெளியிட்ட செய்தியில், நிவாரண உதவி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபடுவதின் பிரதான நோக்கம் என்னவெனில் புலம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களை பயங்கரவாதக் குழுக்களில் சேர்த்துக் கொள்ளுவதைத் தடுப்பதன் மூலம் அமெரிக்காவின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுவதேயாகும். அமெரிக்காவினால் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் உலகின் ஏனைய நாடுகளில் நடாத்தும் ஆக்கிரமிப்பு மற்றும் பலாத்காரம் போன்றவற்றை அவதானிக்கும் போது, உண்மையிலேயே இது ஒரு பயங்கரமான நிலையாகும். இரண்டாவது, அமெரிக்கப் படையினர் தங்களின் ஆக்கிரமிப்புக்களை முன்னெடுத்துச் செல்லுவதற்காக நிரந்தரமான படைத் தளமொன்றை இலங்கையில் ஆரம்பிக்க முயற்சியெடுத்து வருகின்றனர் என்பது நீண்ட கால சந்தேகமாகும். அமெரிக்கப் படையினர் இலங்கையில் தங்கியிருப்பதை நாம் கடினமாக எதிர்க்கின்றோம்.

அமெரிக்க அரசு வரலாறு பூராவும் அதன் பண அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவை மூலம் அதன் நவ தாராளவாத பொருளாதார மறுசீரமைப்பை இலங்கையில் நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்து வந்தது. இலங்கையில் இவ் அபிவிருத்தித் திட்டம் வெற்றியளிக்காததோடு மக்களினாலும் முழுமையாக நிராகரிக்கப்பட்டது. இருப்பினும் சுனாமியின் பின்னர் திரும்பவும் அவ் அபிவிருத்தித் திட்டம் வெளிக் கொணரப் பட்டிருக்கின்றது. அமெரிக்கா வழங்கிய நிதியை சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் க்கட்டியெழுப்புவதற்காக மாத்திரமே பாவிக்க வேண்டும். அதைத் தவிர வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக பயன்படுத்தலை நாம் எதிர்க்கின்றோம். அதனை உன்னத நன்கொடையாக எமக்கு வழங்கிய அமெரிக்க மக்களின் உதவி ஒத்துழைப்பை துஷ்பிரயோகம் செய்வதாக கருதுகின்றோம். இதனை உணர்ந்து அமெரிக்க அரசு அதன் கொள்கையை மீளப் பரிசீலிக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பொதுமக்களின் அயராத ஒத்துழைப்பின் மூலமே பாதிப்புக்குள்ளானவர்களின் அவசர நிவாரணத் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. 'நாங்கள் ஒரு மாத காலம் பூராவும் காத்துக்கொண்டிருந்தோம்.




எதுவுமே நடைபெறவில்லை. அதிகாரிகள் வந்து விபரங்களை எழுதிக்கொண்டு போவது மாத்திரமே நடைபெறுகின்றது.' காலிப் பிரதேசத்தில் பாதிப்புக்குள்ளானவர்கள் கூறினர். 'நாங்கள் 100 மீட்டர் எல்லைக்குள் இருப்பதனால் அரசாங்க நிவாரண உதவிகள் எதுவும் கிடைப்பதில்லை. சுயேற்சை அமைப்பொன்றினால் வழங்கப்பட்ட தற்காலிக கூடாரங்களில் நாங்கள் திரும்பவும் குடியமரச் சென்றோம்.' இவ்வாறு ஹம்பாந்தோட்ட பிரதேச புலம்பெயர்ந்தவர்கள் கூறினர். புலம்பெயர்ந்தவர்களுக்கு கூடாரமாவது இன்னும் கிடைக்கவில்லை. உறுதியளிக்கப்பட்ட 375 ரூபா உலர் உணவோ அல்லது 5,000 ரூபா கொடுப்பனவோ இம் மக்களுக்கு கிடைக்கவில்லை.' திருகோணமலையின் எமது செய்தியாளர்கள் கூறுகின்றார்கள்.

> "சர்வதேச ரீதியில் திட்டமிட்டு பலாத்காரமாக சுமத்தப்படும் நீர் தனியார்மய வர்த்தகத் திட்டம் இலங்கையில் மாபெரும் சமூக அனர்த்தத்தை உண்டுபண்ணுவதோடு பாரம்பரிய நீர் முகாமைத்துவ முறைகளில் அழிவுகளையும் ஏற்படுத்தும். இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட பெரும் அழிவான இச் சுனாமியைப் பயன்படுத்தி அதைவிட மாபெரும் அழிவை ஏற்படுத்த மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும்."

அத்துடன் பாதிப்புக்குள்ளானவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கென அரசினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள், திரும்பவும் பாதிப்புக்கு வழிவகுத்துள்ளன. அவர்களின் கூற்றுப்படி, இத் திட்டங்களின் நோக்கம் 21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகங்கொடுத்து, நவீனமயப் படுத்தலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதாகும். இந்தத் திட்டம் நிரைவுருவதற்கு 3 வருடங்கள் எடுப்பதோடு 2 வில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். இப் பணத் தொகையில் ஒரு பகுதி திருப்பிக் கொடுப்தின் அடிப்படையில் சர்வதேச நாணய நிறுவனத்தினால் வழங்கப்படும் கடனாகும்.

## *40,000 த்தின்* கல்லறைகளின் மேல் உருவாகும் சுவர்க்கம்

உலகலாவிய ரீதியில் நிவாரண உதவி திரட்டல், சுனாமியின் பின் முதல் வாரத்தினுள் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரண உதவியளித்தல் மற்றும் மூன்று வாரங்களுக்குள் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து முன்வைத்தன் காரணமாக அரசு சுனாமி பாதிப்புக்கு உடனடியான பதில் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தென்பட்டது. ஆனால் இதுவரை பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ஒரு சொற்பமே கிடைத்துள்ளதுடன் மேலும் அனேகமானவற்றை அவர்கள் இழக்க இடமுள்ளதாகத் தென்படுகின்றது. இந்தத் திட்டம் ஜனாதிபதி மூலம் நியமிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயலணி மூலம் செயற்படுத்தப்படும். இச் செயலணியில் பாதிப்புக்கு உள்ளானவர்களின் பிரதிநிதிகள் அல்லது பிரதேசங்களில் செயற்படுகின்ற சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூட உள்ளடக்கப்படவுமில்லை. அதேபோன்று அழிவொன்றின் பின்னர் மீளப் புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாக அனுபவமுள்ள எந்தவொரு துறைசார் நிபுணர்களோ, விஞ்ஞானிகளோ அல்லது தொழிலாளர்களோ இல்லை. அதற்குப் பதிலாக டி.எப்.சி.சி. வங்கியின் பிரதான நிர்வாக அதிகாரி, செலான் வங்கியின் நிர்வாகஸ்தர், ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் முன்னைய தலைவர் (உல்லாசத் துறை நிறுவனங்கள் மூன்றின், பாரிய கரையோர உல்லாச ஹோட்டல்கள் ஐந்தில், துறைமுகம் தொடர்பான பிரதான நிறுவனங்களின் உரிமையாளர் மற்றும் சர்வதேச விமான சேவைகள் இரண்டின் பிரதிநிதிகள்) கார்ஷன் கம்பாவெச் நிறுவனத்தின் இயக்குனர், கரையோர உல்லாச ஹோட்டல்கள் இரண்டின் உரிமையாளர் மற்றும் சர்வதேச விமான சேவை இரண்டின் பிரதிநிதிகள்), ஜினசேன நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குனர், (ஹோட்டல் மற்றும் பாரிய கடைத் தொகுதி நிர்மானத்தில் ஈடுபட்ட) ஏய்டிக்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ நிர்வாகஸ்தர் (கரையோர உல்லாச ஹோட்டல் 5 ந்தின் உரிமையாளர், மின்சக்தி உற்பத்தி மற்றும் கப்பல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் துறையின் முக்கியஸ்தர்), ஸ்டேஷன் மற்றும் டிஸ்டலரிஸ் நிறுவனத்தின் இயக்குனர். (தேயிலை உற்பத்தியின் கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட மற்றும் ஏய்டிக்கன் ஸ்பெனஸ் நிறுவனத்தின் பங்குரிமையாளர்), மாஸ் ஹொல்டிங்ஸ் (Mas Holdings) நிறுவத்தின் தலைவர் ( உள்ளாடை உற்பத்தி நிறுவனம்) போன்றோரினால் இந்த செயலணி அமைக்கப்பட்டுள்ளது.



## பழைய வைனுக்கு புதிய பாத்திரம்

இத் திட்டத்தின் மூலம் சுனாமியினால் பாதிப்படைந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீளக் கட்டியெழுப்புவது மாத்திரமல்லாமல், சுனாமிக்கு முன்னிருந்தே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அனேக வேலைத்திட்டங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தோடு இலங்கை மக்கள் பல வருட காலமாக கடுமையாக எதிர்த்த அனேக திட்டங்களும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன: உதாரணமாக 3 வருடங்களுக்கு முன்னர் இருந்தே மக்கள் எதிர்ப்புக்குப் பாத்தரமாகியிருந்த மாத்தரை – கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையைக் குறிப்பிடலாம். மேலும் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பாரிய மீன்பிடிக் கப்பல்களை நிறுத்துவதற்குப் பயன்படுத்தும் மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணித்தல், எப்பாவல போஷ்பேட் நிதியம் மற்றும் நீர் வளத்தை விற்றல் போன்றவற்றிற்கும் பல வருட காலமாகவிருந்தே மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் சுனாமியின் பின் திரும்பவும் இத் திட்டங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்காக சுனாமிப் பேரழிவு கருவியாகப் பாவிக்கப்படுகின்றது. அதிவேக நெடுஞ்சாலை தொடர்பான விடயத்தில் தங்களின் பாரம்பரிய நிலங்களிலிருந்து புலம்பெயர மறுத்த மக்கள் ஆயுதமேந்திய பொலிஸ் அதிகாரிகளினால் விரட்டியடிகப்பட்டனர்.

இத் திட்டத்தைச் சர்வதேச ரீதியில் பலப்படுத்துவதற்காக பாரியளவிலான உட்கட்ட வசதிகளை அமைத்து பெரும் முதலீட்டாளர்களை கவர்ந்து எமது நாட்டில் முதலீடு செய்வதற்குத் தூண்டுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு முயற்சிக்கின்றது என்பது தெளிவாகின்றது. இருப்பினும் இலங்கையில் இத் திட்டம் தோல்வியடைந்ததுடன் வறியவர்களுக்கும் துயருருவோருக்கும் எவ்வித நலனையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இதன் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களின் வாழ்க்கையை எவ்வகையிலும் கட்டியெழுப்ப முடியாது. மாறாக வளங்கள் மேல் அவர்களுக்கு உள்ள உரிமையை பறித்தெடுத்தல், பயனுள்ள வாழ்வாதார தொழிலில் ஈடுபடுவதற்கு அவர்களுக்குள்ள சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்தல் போன்றவை அவர்களை மேலும் துயருக்கு இட்டுச் செல்லும் என்பது நிச்சயம்.

சுனாமிப் பேரழிவிற்கு முன்னர் அரசு பெரும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. ஆனால் சுனாமியின் பின்னர் அரசிற்கு பாரியளவிலான நிதி வந்து குவிந்ததுடன் அவற்றைப் பாவிப்பது தொடர்பாக நிபந்தனைகளும் குறைந்தன.

எனவே பாதிப்புக்குள்ளான மக்களை அடிப்படையாக கொண்டு நேர்மையாக புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் படி அரசிற்கு வற்புறுத்துவதற்காக கூட்டுச் செயற்திட்டமொன்று மிகவும் அவசரத் தேவையாகவுள்ளது. அரசு அதன் திட்டத்தைத் தயாரிக்கும் செயற்பாட்டில் பாதிப்புக்குள்ளானவர்களை ஒதுக்கியுள்ளதுடன் அம் மக்களுக்கு தங்களின் திட்டத்தைத் தயாரித்துக்கொள்ளுவதற்கு உள்ள உரிமையையும் பறித்தெடுத்துள்ளது. கரையோரத்திலிருந்து குறைந்த பட்சம் 100 மீற்றர் அல்லது 200 மீற்றர் வரையாகவுள்ள பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் எவ்வித மனித நடமாட்டத்திற்கும் இடமளிப்படமாட்டாதென்று அரசு கூறுகின்றது. இது மக்களின் நலனுக்காகவேயென்று கூறப்படுகின்றது. கரையோரப் பகுதிகளில் வீடுகள் நிர்மாணிப்பதிலிருந்து மீனவ மக்களை பலாத்காரமாக தடுத்து நிறுத்தியுள்ளது. உகந்த மாற்றுக் காணிகள் ஒதுக்கப்படாமையினால் மக்கள் தாங்கள் வாழ்வது எங்கேயென்று கூறும் வரை தற்காலிகக் கூடாரங்களில் காத்துக்கொண்டிருக்க நேரிட்டுள்ளது.

இதன் மத்தியில் அரசு உல்லாசத் துறை வியாபாரிகளின் உல்லாச ஹோட்டல்களைத் (100 மீட்டர் எல்லைக்குள் உள்ள) திருத்தியமைக்க ஊக்கமளிக்கின்றது. ஒருசில ஹோட்டல்கள் அழிவுற்று சில நாட்களுக்குள் மீள நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் உல்லாசத் துறை வியாபாரத்திற்கு இடமளிப்பதற்காக மீனவ மக்களை கரையோரத்திலிருந்து அகற்றும் முயற்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. சுனாமி ஏற்பட பல மாதங்களுக்கு முன்னர் புதிய அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு இடமளிக்காத சில மீனவர்களின் குடிசைகள் அழித்து தரைமட்டமாக்கப்பட்ட செய்தியொன்று கிழக்குப் பிரதேசத்திலிருந்து அறிக்கையானது.

பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவியளிப்பதற்காக வழங்கப்பட்ட நிவாரணங்களை வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் அதே சமயத்தில் அவர்களை நிரந்தர அகதி நிலைக்குட்படுத்தும் கடும் அபாயம் நிலவுகின்றது. இதற்கு முன்னரும் பற்பல இயற்கை, சமூக மற்றும் அரசியல் அனர்த்தங்களின் பின்னர் மக்கள் வாழ்வை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் முயற்சிகள் மிகவும் பலயீனமானதாகவே இருந்தது. 15 வருடங்களுக்கும் அதிகமாக நம்ப முடியாத அளவிற்கு கஷ்டங்கள் மத்தியில் அகதிமுகாம்களில் வாழும் வடக்கு மற்றும் கிழக்கின் போர் நடைபெற்ற பிரதேசங்களின் மக்கள் 3 வருடங்களாக 'சமாதானம்' அல்லது 'போர் நிறுத்த' காலத்தில் கூட அகதி முகாம்களிலேயே வாழுகின்றனர்.

தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணியினால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவும் நவ தாராளவாத தந்திரோபாயங்களின் விரிவாக்கமே. மக்களின் பணத்தைப் பயன்படுத்தி நாட்டை பாரிய இறக்குமதி – ஏற்றுமதி வியாபாரத் தளமாக மாற்றுவதே இவர்களின் நோக்கம். இதற்காகவே இவர்களுக்கு பாரிய உட்கட்டுமான வசதிகள் தேவைப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென்று சேகரித்து அனுப்பப்பட்ட பணம் அவர்களின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு சதமும் அவர்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

---

ஆய்வு:
தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு நிறுவனம்.



"தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணியினால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவும் நவ தாராளவாத தந்திரோபாயங்களின் விரிவாக்கமே. மக்களின் பணத்தைப் பயன்படுத்தி நாட்டை பாரிய இறக்குமதி – ஏற்றுமதி வியாபாரத் தளமாக மாற்றுவதே இவர்களின் நோக்கம். இதற்காகவே இவர்களுக்கு பாரிய உட்கட்டுமான வசதிகள் தேவைப்பட்டுள்ளன."

# சுனாமிக்குப் பின்னுள்ள மீள் கட்டமைப்பு பணிகளுக்கான மக்கள் செயல் நெறி– கொழும்புப் பிரகடனம்

## 24 – 26 ஏப்ரல் 2005 – இலங்கை

இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மாலைதீவு, சோமாலியா, போன்ற எமது நாடுகளின் கரையோரங்களையும், தீவுப் பிரதேசங்களையும், சுனாமி ஆழிப் பேரலைகள் 26 ம் திகதி டிசம்பர் 2004 இல் பேரழிவுக்குள்ளாகியுள்ளது. இலட்சக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமற் போயினர் அல்லது காயப்பட்டுள்ளனர். பல இலட்சக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களது வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. சோமாலியாவில் சுனாமியின் ஏனைய தாக்கங்களோடு கடலில் சட்ட ரீதியற்ற முறையில் புதைக்கப்பட்டிருந்த கதிரியக்க அல்லது நச்சுக் கழிவுப் பொருட்கள் கரையோரங்களில் கடல் அலைகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இக் கதிரியக்க அலைகளினால் மக்களின் ஆரோக்கியத்துக்கும் சூழல் சுகாதாரத்துக்கும் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

> அநேகமான எமது நாடுகளில் சுனாமி மீள்கட்டமைப்புப் பணிகள், மக்கள் இயக்கங்களால் மிக வன்மையாக நிராகரிக்கப்பட்ட நவதாராளவாத வேலைத் திட்டங்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் குறிப்பாக மீள்கட்டமைப்புப் பணிகள் குறித்த கட்டுப்பாட்டு அதிகாரம் தனியார் துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உலகெங்கும் உள்ள மக்கள் சுனாமியின் தாக்கத்தை ஈடு செய்வதற்கு நேர்மையுடனும் இரக்கத்துடனும் பெருமளவு பங்களிப்புக்களை செய்துள்ளனர். பல கோடிக் கணக்கான டொலர்களை பிழைத்தோரின் வாழ்வாதாரங்களையும் வாழ்விடங்களையும் மீள் கட்டமைப்பு செய்வதற்காக நன்கொடையாக வழங்கியுள்ளனர். எமது அரசாங்கங்களும் எமது நாடுகளில் செயற்பட்டுவருகின்ற சர்வதேச முகவர்களும் ஒன்றிணைந்து இதைச் செயற்படுத்த முனைந்து வருகின்றனர். இவர்கள், பாதிப்புக்குள்ளான சமுதாயங்களின் தேவை குறித்து அவர்களிடமே ஆலோசனை பெற வேண்டும், அவர்களை வலுவூட்ட வேண்டும். மேலும் அது குறித்து சாதகமான வழிகாட்டக் கூடிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும், என்பதிலும் ஒருமைப்பாடுடையவர்களாக உள்ளனர்.

எவ்வாறெனினும் நான்கு மாதங்களின் பின்னர் பல இலட்சக்கணக்கான பாதிப்புற்ற மக்கள் இன்னும் நிர்க்கதியான சூழ்நிலைமைகளிலும் ஸ்தீரமற்ற வாழ்நிலைமைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பல வேளைகளில் அவர்கள் இயக்கமற்ற, கீழ் நிலைமைகளிலுள்ள கையேந்துபவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இது, பாதிப்புற்றோரின் தேவைகள்,விருப்புக்கள். வறுமை தொடர்பான பிரச்சனைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளாது அவசர அவசரமாக நிவாரணப் பொருட்களை வழங்குவதால் ஏற்படுகின்ற நிலைமையாகும். சில இடங்களில் சுனாமிப் பேரழிவுக்கு முன்னர் மக்கள் பிணக்கு போர் போன்ற நிலைமைகளின் தாக்கங்களின் கீழ் வாழ்ந்து வந்துள்ளனர்.

மிகத் துரதிர்ஷ்டவசமான விடயம் என்னவென்றால் நிவாரணங்கள் பாதிப்புற்ற சனத்தொகையில் வெளிப்படாத பகுதியினரை அடையவில்லை என்பதாகும், குறிப்பாக பெண்களும் சுனாமியினால் நேரடியாக பாதிக்கப்படவில்லை எனக் கொள்ளப்படுகின்ற பகுதியினரும். நிவாரண மீள்கட்டமைப்பு பணிகளுக்கான நன்கொடைகளை வழங்கிய நன்கொடையாளர்களிடையே உருவாகியுள்ள அவசர உணர்வை நாங்கள் நன்றியுணர்வுடன் ஏற்றுக் கொள்ளுகின்ற அதேவேளையில் இவ்வாறான நிவாரணப் பணத்தை குறுகிய காலத்தில் பகிர்ந்தளிக்குமாறு கட்டாயப்படுத்துதல் உள்ளூர் நிலைமைகளிலும் அமைப்புக்களிலும் ஏற்கனவே உள் ள சமமற்ற தன்மைகளையும் செயற்பாடுகளையும் மீள வலியுறுத்துவதுடன் உள்ளூர் கட்டமைப்புக்களையும்



ஒழுங்கமைப்புக்களையும் பலவீனப்படுத்துவதாகவும் உள்ளது. மேலும் இது நீண்ட கால சமூக அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் குறைத்து விடுகின்றது. இந்த நிலைமை, அடிமட்ட மக்களின் யதார்த்தங்களை புரிந்த கொள்ளும் தன்மையை அதிகரிப்பதற்காக நன்கொடைகளை வழங்கும் மக்களுக்கும் நன்கொடைகளைப் பெறும் நாடுகளிலுள்ள மக்களுக்கும் இடையே ஒரு விரிவான கலந்துரையாடல் முறைமை ஒன்றை வேண்டி நிற்கின்றது.

அனேகமான எமது நாடுகளில் சுனாமி மீள்கட்டமைப்புப் பணிகள், மக்கள் இயக்கங்களால் மிக வன்மையாக நிராகரிக்கப்பட்ட நவதாராளவாத வேலைத் திட்டங்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் குறிப்பாக மீள்கட்டமைப்புப் பணிகள் குறித்த கட்டுப்பாட்டு அதிகாரம் தனியார் துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தீர்மானங்கள் தனியார் துறையினரின் சுய விருப்புக்களுக்கும் கரிசனைகளுக்கும் ஏற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களது கரையோர நிலங்களுக்கான பாரம்பரிய உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. மீள் வாழிடம் அமைத்தல் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளுதல் தனிப்பட்டதும் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றதுமான உரிமை ஆகும்.

இந்த நிலைமையில் மீனவர்கள், விவசாயிகள், மக்கள் ஒருங்கமைப்புக்கள், பிராந்திய வலையமைப்புக்கள், தேசிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், அபிவிருத்தி முகவர்கள், இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, சோமாலியா போன்ற சுனாமிப் பாதிப்புக்குள்ளான நாடுகளில் வேலை செய்கின்ற மக்கள் போன்றோர் 25,26 ஏப்ரல் 2005 இல் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

எமது நாடுகளிடையே சுனாமிக்குப் பின்னுள்ள மீள் கட்டமைப்புப் பணிகள் தொடர்பாக பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் பல்வேறு விடயங்களில் ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதில் தொடர்புபடுத்தல்கள் குறைவாக உள்ளமை, நிவாரணங்களைப் பகிர்ந்தளிப்பதிலுள்ள சமமின்மையும், பொருத்தப்பாடின்மையும், நிவாரண மீள்கட்டமைப்பு வேலைகளுக்கான கொள்கைகளில் பொருத்தமற்ற, மேல் – கீழ் அணுகுமுறை காணப்படுகின்றமை நிதி, கொள்கை போன்றவற்றில் வெளிப்படையான தன்மை இல்லாமை, சமுதாயப் பங்குபற்றுதல் குறைவாகக் காணப்படுகின்றமை.

எமது நாடுகள் எல்லாவற்றிலும் காணப்படுகின்ற பாரதூரமான பிரச்சனைகள் தீர்க்கப்படுவதற்கு இப் பணிகள் மக்கள் செயல் நெறி ஒழுங்கூடாகக் கொண்டு செல்லப்படல் வேண்டும் என்பதில் நாங்கள் நம்பிக்கை உள்ளவர்களாக உள்ளோம். இம் மக்கள் செயல்நெறி பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால் திரட்டப்பட்டுள்ள எல்லா வளங்களும் நேர்மையாக அவர்களுக்கே உரித்தானது என்றும் அவர்கள்

விரும்புகின்ற வகையிலேயே அவை பயன்படுத்தப்படல் வேண்டும் என்றும் ஏற்றுக் கொள்கிறது.

இது பாதிக்கப்பட்ட சனத்தொகையில் இருந்து வருகின்ற பிரதிநிதிகளால் நிருவகித்து முகாமை செய்யக் கூடிய நிதி ஒதுக்கீடு ஒன்றை அமைப்பதன் மூலமே அடையப்பட முடியும். இந்த நிதி நீண்டகால பயன்பாட்டுக்காக இருத்தல் வேண்டும். மேலும் உள்ளூர் மக்கள் ஒழுங்கமைப்புக்களுக்கு இவை வெளிப்படுத்தப்படுவதுடன் வகை சொல்லக் கூடியதாகவும் அமைக்கப்படல் வேண்டும்.

தேசிய அரசாங்கங்களுடன் பல்தரப்பு இருதரப்பு ஸ்தாபனங்கள் உருவாக்குகின்ற திட்டமிடல், தீர்மானம் மேற்கொள்ளுதல் தொடர்பானஅமைப்புக்களில் பாதிக்கப்பட்ட மக்களின் ஒழுங்கமைப்புக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கான முறைமை ஒன்று உருவாக்கப்படல் அவசியமாகும். இது தொடர்ச்சியான கண்காணித்தலை மேற்கொள்ளுவதற்காகவும் உருவாக்கப்படல் வேண்டும். இந்த விடயம் இதற்கு முன்னர் இதே போன்று பாங்கொக், மீடன் போன்ற இடங்களில் இடம் பெற்ற மாநாடுகளிலும் வலியுறுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களின் தகவல்கலைப் பெருவதற்கான உரிமை, மொழி தொடர்பாடல் உரிமை போன்றன உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

நன்கொடையாளர்களையும் செயற்பாட்டாளர்களையும் ஒன்றிணைப்பதற்கான இணைந்த உபாய மார்க்கங்களை விருத்தி செய்யப்படுவதன் அவசியத்தை நாம் மீள வலியுறுத்துகின்றோம். அவ்வாறான வலையமைப்புக்களை எல்லா மட்டங்களிலும் உருவாக்குவதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம் இது மக்கள் அணுகுமுறைகளினூடாக எல்லா செயல்முறைகளையும் கண்காணிக்கும்.

சுனாமிக்கு பின்னுள்ள மீள்கட்டமைப்பு பணிகளுக்கான அடிப்படை கோட்பாடுகளை நாம் மீள உறுதிப்படுத்துகின்றோம். மக்களுக்கான தேவைகள் குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களே உரிமையாளர்கள், எனவே அவர்களே மீள்கட்டமைப்பு செயல் நெறிகளில் தீர்மானம் மேற்கொள்ளுவோர். அவர்களே மீள்கட்டமைப்புப் பணிகளின் வடிவமைப்பாளர்கள். பங்குபற்றுனர்களால் கைச்சாத்திடப்பட்டது.

1: வறுமையை ஒழிப்பதற்கான தெற்காசிய அமைப்பு (இலங்கை, மாலைதீவு, இந்தியா, நேபால், பூத்தான், பாகிஸ்தான்)

2: சர்வதேச மீனவ சகோதரத்துவம் (இந்தியா)

3: தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு நிறுவனம் (இலங்கை)

4: மீனவ சமூக தென் இந்திய ஸ்தாபனம் (இந்தியா)

5: நிலையான விவசாயத்திற்கான நிலையம் (இந்தியா)

6: சினேஸ்டா ஸ்தாபனம் (இந்துனேசியா)

7: இந்துனேசிய நேர்மையற்ற நிலை கவனிப்பு (இந்துனேசியா)

8: எப். எஸ்.பி.ஐ. (இந்துனேசியா)

9: லா வியா கெம்பசினா (இந்துனேசியா)

10: சுகாதார மற்றும் கல்வி அமைப்பு (மாலைதீவு)

11: பாஷான் (மாலைதீவு)

12: உள்ளாக புலம்பெயர்ந்தவர் முகாமைத்துவ அமைப்பு (மாலைதீவு)

13: மீனவ, விவசாய மற்றும் மீனவ வள அமைச்சு (மாலைதீவு)

14: சமூக அபிவிருத்தி அமைப்பு (சோமாலியா)

15: தெற்கு மீனவர்களின் ஸ்தாபனம் (தாய்லாந்து)

16: அபிவிருத்திக்கானஅரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டு (தாய்லாந்து)

17: நிலையான அபிவிருத்திக்கான ஸ்தாபனம் (தாய்லாந்து)

18: தேசிய மீனவ சகோதரத்துவம் (இலங்கை)

19: சவிஸ்திரி பெண்கள் வலையின்னல் (இலங்கை)

20: தெற்கின் மீனவ அமைப்பு (இலங்கை)

21: முஸ்லிம் பெண்கள் ஆராச்சி மற்றும் செயற்பாட்டு அமைப்பு (இலங்கை)

22: அம்பாறை மாவட்ட மீனவ சகோதரத்துவம் (இலங்கை)

23: புத்தள மக்கள் அபிவிருத்தி அமைப்பு (இலங்கை)

24: யாழ்ப்பாண மீனவ கூட்டுறவு சங்கம் (இலங்கை)

25: ஐக்கிய தொழிற் சங்க ஸ்தாபனம் (இலங்கை)

26: சேவா லங்கா ஸ்தாபனம் (இலங்கை)

27: பேராதெனிய பல்கலைக் கழகம் (இலங்கை)

28: மாற்றுக் கொள்கைக்கான கேந்திரம் (இலங்கை)

29: பசுமை அமைப்பு (இலங்கை)

30: ஒக்ஸ்பேம் (அவுஸ்ரேலியா)

31: யூரொஸ்டெப் (பெல்ஜிம்)

32: ஐரோப்பிய வெளிக் கொள்கை ஆலோசகர்கள் (பெல்ஜிம்)

33: உலக பல்கலைக் கழக சேவை (கனடா)

34: பியுபல் இன் நீட் (செக் குடியரசு)

35: எக்ஷன் ஏய்ட் (இந்தியா)

36: சீ.இ.எஸ்.வி.ஐ. (இத்தாலி)

37: ஜெர்மன் எக்ரோ எக்ஷன் (ஜேர்மனி)

38: ஹிவோஸ் (நெதர்லாந்து)

39: எக்ஷன் ஏய்ட் (இலங்கை)

40: கிறிஸ்டியான் ஏய்ட் (பிரித்தானியா)

41: கெபட் (பிரித்தானியா)

மொழிபெயர்ப்பு: சுல்பிக்கா இஸ்மைல்

# வைக்கோல்

## இட்டு விவசாய நிலத்தைப் பாதுகாப்போம்



ஆதிகாலத்திலிருந்தே விவசாயிகள் வேளாண்மை அறுத்து மிதித்தெடுத்த பின்னர் களத்தில் மீதியாகும் வைக்கோலை மிகவும் பெருமதியான வளமாக மதித்தனர். மழை காலத்தின் போது நனைய விடாமல் களஞ்சியப்படுத்தி வைத்து உணவு தட்டுப்பாடு ஏற்படும்போது கால்நடைகளுக்கு உப்பு நீர் சிறிதளவு தெளித்து வைக்கோல் உண்ணக் கொடுப்பது எமது முதாதையரின் பழக்கமாகும். அவர்கள் கிலிரிசிரியா இலை போன்ற இலைகளை வைக்கோலுடன் கலந்து கொடுப்பதன் மூலம் கால்நடை உணவுகளினது போஷாக்கு நிலையை விருத்திசெய்து கொண்டனர். அது மாத்திரமன்று வைக்கோலின் மேல் வளரும் காலான் கிராமத்தவர்களின் போஷக்கும் சுவையும் நிரைந்த உணவாகவிருந்தது. பழவகைகள், மட்பாண்டங்கள் மற்றும் கண்ணாடிப்பாத்திரங்களை களஞ்சியப்படுத்தும் மற்றும் கொண்டுசெல்லும் போதும் அவற்றை பாதுகாப்பதற்கான பொருளாக பாவிப்பதற்கு வைக்கோல் உகந்ததாக இருக்கின்றது.

இந் நாட்டு விவசாயிகள் நீண்ட காலமாக வைக்கோலை அவர்களின் வீட்டுத்தோட்டச் செய்கையில் பரப்பி மண்ணை செழிப்புறச் செய்வதற்கு பழகியிருக்கின்றார்கள். சேதனப் பசளை உற்பத்தி செய்யும் போது பிரதானமான பொருளாக வைக்கோலை சேர்த்துக் கொள்ளலாம்.

வயலின் மண்ணை மீள செழிப்புறச் செய்து உயிர் கொடுக்கும் பிரதானமான முறையாக தற்போது எரியப்படும் மற்றும் தீயிட்டு எரிக்கப்படும் வைக்கோலை பாவிப்பது மிகவும் பயனுள்ள செயலாகும். புதிய (நவ) கெக்குலம முறையில் வயலில் நெல் விதைத்து அதன் மேற்பரப்பில் வைக்கோலால் மூடிவிடுவதனால் கிடைக்கும் பலன்களில், முதலாவதாக அமைவது மேற்பரப்பில் மண் அரித்துச் செல்லுவதை தவிர்த்தலாகும். வைக்கொலில் இதுவரை காலமும் கண்டுபிடிக்கப்படாத முக்கியம் வாய்ந்த களை கட்டுப்படுத்தும் இரசாயனம் அடங்கியுள்ளது. நெல்லைத் தவிர்ந்த ஏனைய களைகளுக்கு அந்த இரசாயனம் பாதிப்பானதாகும். எனவே வயலில் விளையும் ஏனைய களைகளை அழித்துவிடும் பிரச்சினை ஏற்படாது. வைக்கோல் உக்கிப்போகும் போது அந்த சேதனப் பொருட்கள் மூலம் மண் செழிப்புறுவதால் நெற்பயிர்ச் செய்கைக்கு இன்னுமொரு பயன் கிடைக்கும். அதாவது செயற்கை இரசாயனப்

பசளை தேவைப்படாமையாகும். நெற்பயிரின் வேர்த்தொகுதி, அடிக்கட்டை மற்றும் கதிர்கள் உரிய போஷாக்கடைந்து வலுவுள்ளதாக இருக்கும் போது பங்கஸ அல்லது கிருமிகளின் உபத்திரவம் ஏற்பட மாட்டாது.

நுண்ணுயிர்களினால் உணவாக உற்கொள்ளப்படும் வைக்கோல் உக்கிப்போகும் போது மேற்பரப்பு மண்ணில் பாரியளவில் விருத்தியாகும் பற்பல மண் புழுக்களின் செயற்பாட்டினால் மண்ணில் துவாரங்கள் ஏற்பட்டு காற்றோட்டம் நன்றாக அமையும். அதே போன்று பயிரிடுவதற்கு மண்ணைப் புதிதாக பண்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது. அதனால் உழுதல் இலவசமாகவே நடைபெருகின்றது. பாரியளவிலான பணத்தை செலவிட்டு உபகரணங்களையோ, உழைப்பையோ, களைகொல்லியையோ அல்லது நச்சு இரசாயனங்களையோ அதற்கு இடத் தேவையில்லை.

வைக்கோலினால் வயலின் மேற்பரப்பு மூடப்படுவதினால் பறவைகளுக்கு விதைகளை புறக்கி சாப்பிட முடியாது. நெல் விதைத்ததின் பின் அவற்றை பாதுகாத்தல் அல்லது பறவைகளை துரத்திவிடுதல் என்பனவற்றை செய்ய வேண்டிய நிலை ஏற்படாது.

வைக்கோலுடன் இலுக் போன்றவற்றை வயலில் பரப்பிவிட முடியும். நீர்ப் பாச்சல், மழை அல்லது பனியை மூடப்பட்ட நிலம் தாக்குப் பிடித்துக்கொள்ளும். அதனால் மண்ணரித்துச் செல்லுவது தவிர்க்கப்படும். மண் செழிப்படையும். இலகிய மண்ணின் காற்றோட்டம் சிறப்பாக அமையும். மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கும். களைகள் வளராது. பாதுகாப்பான மண்ணில் உரிய போஷாக்கைப் பெரும் நெல்லின் வேர்த் தொகுதி இரண்டு மூன்று மடங்கு செழிப்பாக வளரும்.

தற்போது புத்தியறிவுள்ள விவசாயிகள் வைக்கோல் போன்று புல் மற்றும் கிலிரிசிடியா போன்ற செடிகளின் இலைகளையும் உக்கிப்போன செடிகள் மற்றும் உயிர்களின் பகுதிகளையும் இடுவதனால் மண்ணை செழிப்புறச் செய்கிறார்கள். இது வயலுக்கு போன்று வீட்டுத் தோட்டத்திற்கும் ஒரே மாதிரியாக பிரயோசனமாகும். சமனான, பிரதான மற்றும் இரசாயனப் பொருட்களை கொண்டுள்ளபடியால் இது சிறப்பான பசளையாகும்.

வயலில் 3 அங்குலம் வரை இருக்கமாக வைக்கோல் பரப்பி மூடி விடுவதால் கிடைக்கும் பயன்கள்.

* சூரிய ஒளி படுவதை தவிர்ப்பதனால் மண்ணின் வெப்பநிலை ஒரே மட்டத்தில் இருக்கும். அதே போன்று குளிர் காலத்தில் மண்ணின் வெப்பத்தையும், வெப்பகாலத்தில் மண்ணின் குளிர்ச்சியையும் பாதுகாக்கும்.

* மண்ணில் நீர் பாதுகாக்கப்படும்.

* மண்ணரித்துச் செல்லுதல் தவிர்க்கப்படும். தொடர்ச்சியாக சில போகங்களுக்கு இடுவதனால் மென்மை, செழிப்பு மற்றும் புழுக்கள் உள்ள மண் உருவாகும். அப்போது அறுவடைக்கு ஒரு முறை மாத்திரம் உழுதல் போதுமானதாகும்.

* மண் புழுக்களின் விருத்தி அதிகரித்து மேற்பரப்பிலுள்ள மண் இலகுவாகும். மண் புழுக்களினால் செய்யப்படும் இந்த செயலினால் மண்ணுக்குள் நீர் இலகுவாக போய்ச் சேரும். மண் கழுவுண்டு போதல் தவிரும். மண் புழுக்கள் உற்பட புழுக்கள் பெருகுதல் ஆரம்பமாகும். இவை மண்ணினுள் செயல்படுவதனால் போஷனையுள்ள மண் தானாகவே உருவாகும். எனவே நெல் விதைப்பதற்கு முன்னர் நாங்கள் செய்யவேண்டியது வயலில் ரேக்கை அல்லது சாதாரன கழப்பையினால் சமமட்டப்படுத்தல் மாத்திரமேயாகும். மண் பண்படுத்தலுக்காக பெரும் தொகையான பணம் செலவழித்து உழுதல் அல்லது ரக்டரினால் உழுதல் எவ்வகையிலும் தேவைப்படமாட்டாது.

* களை முளைத்தல், வளருதல் மற்றும் விருத்தியாகுதல் தவிர்க்கப்படும். அதனால் களை கட்டுப்படுத்தப்படும். நேர காலம், உழைப்பு மற்றும் பணம் மீதியாகும். களை கொல்லி பாவியாதபடியினால் மண்ணிலுள்ள நீர் நச்சடைதல் தவிர்க்கப்படும்.

* பயிர் வளரும் போது வைக்கோல் உக்கி மண்ணுக்குக் கனிசமான போஷாக்குக் கிடைக்கும்.

* நெற்பயிருக்கு தேவையான பசளைகளில் பாரியளவு வைக்கோலினால் கிடைக்கின்றது. தொடர்ச்சியாக சில போகங்கள் வயலுக்கு வைக்கோல் இடுவதனால் நெற்பயிருக்கு தேவையான பசளை அதிகமாகக் கிடைக்கும்.

இன்று வயலுக்கு வைக்கோல் இடாது எரித்துவிடுவதினால் இந்தப் பயன் வயலுக்கு மாத்திரமல்ல விவசாயிக்கும் சூழலுக்கும் இல்லாமல் போயுள்ளது.

பசளையாக வைக்கோலில் அடங்கியுள்ள இரசாயன குணங்களும் ஆய்வின் பெறுபேறுகளும். நாடு பூராவும் பற்பல பிரதேசங்களில் வைக்கோலை ஆய்வு செய்தலின் போது காணப்பட்டதாவது, வைக்கோலில் நைட்ரிஜன் போஷனை 0.66 – 0.84% மும் பொட்டாசியம் போஷனை 1.30 – 2.03% மும் அடங்கியுள்ளது என்றாகும். ஹெக்டயார் 1 க்கு வைக்கோல் 4 டொன் அறுவவடையின் போது (தானிய வைக்கோல் பங்கு 1:1) அகற்றி விடும் வயலில் உள்ள வைக்கோலில் நைட்ரிஜன் போஷனை கி.கி. 26 – 33 றும் பொட்டாசிய போஷனை கி.கி. 52 – 80 தும் அடங்கியுள்ளது. உரிய முறையில் வைக்கோலை உரமாகப் பாவிப்பதாகவிருந்தால் அது இரசாயனப் பசளையுடன் மதிப்பிடும் போது இடும் இரசாயனப் பசளைகளில் நைட்ரிஜன் போஷனை 30% த்தை அடக்கியுள்ளதுடன் 100% த்தை விட அதிகமாக பொட்டாசியப் போஷனையை உள்ளடக்க முடியும்.

நாடு பூராவும் நடாத்தப்பட்ட ஆய்விகளின் பிரகாரம் இலங்கையில் சிகப்பு புரவுன் மண் (உலர்ந்த வலயத்தில் அதிகமாக காணக் கூடியதாகவிருக்கும்) பகுதிகளில் வைக்கோல் இடுவதனால் விளைச்சலில் எந்தவித மாற்றமுமில்லாதிருப்பதைக் அவதானிக்கக் கூடயதாகவிருப்பதனால் பொட்டாசியப் பசளை பாவனையை முழுமையாக நிறுத்திவிட முடியுமென்பதாகும். (மஹஇலுப்பல்லம ஆய்வு நிலைய 1982/83 அறிக்கை)

3 1/2 மாத நெல் இனம் சம்பந்தமாக செய்யப்பட்ட ஆய்வின்போது காணப்படுவதாவது (ஹெக்டயார் 1 க்கு 4 டொன்னாகும்) விளைச்சலில் பெற்ற வைக்கோலை மீளவும் மூடு பொருளாக வயலுக்கே பாவிப்பதன் மூலம் நைட்ரிஜன் உரம் 33% தையும், பொட்டாசியம் உரத்தையும் முழுமையாக அகற்றிவிட முடியுமென்பதாகும். விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட உரக் கலவையுடன் மதிப்பிடும் போது இவ்வாறு வைக்கோல் இடுவதின் மூலம் தானிய விளைச்சலிலோ, கதிர்களின் எண்ணிக்கையிலோ அல்லது விதை 1000 தின் பாரத்திலோ எந்தவித மாற்றமும் ஏற்படமாட்டாது என்று வெளிப்படுத்தப்பட்டுள்து.

வைக்கோல் எரித்தல் மற்றும் போஷனை அழிவு

வைக்கோலுக்கு தீயிடும் போது அதிலுள்ள போஷனையின் பெரும்பகுதி அழிவுக்குள்ளாகின்றது. ஆய்வுகளில் வெளியாகியுள்ள படி வைக்கோலில் உள்ளடங்கியுள்ள நைட்ரிஜன் (N), சல்ப (S)

மற்றும் பாவன்(C) அனைத்தும் வாயுவாக வெளியில் போவதுடன் பொட்டாசியம் (K) சுமார் 80% சாம்பலாக மீதியாக இருக்கக் கூடும். இருப்பினும் இந்த சாம்பலில் அடங்கியுள்ள பொட்டேசியம் நீருடன் கலப்படையும் போது மிகவும் இலகுவாக மண்ணுடன் கழுவுண்டு செல்லும் இதன் பிரகாரம் காணப்படுகின்ற கருத்தாவது வைக்கோலுக்கு தீயிடுவது என்பது பெருமதியான சேதனப்பசளையை அழித்துவிடுவது மாத்திரமல்லாது அதில் அடங்கியுள்ள அனைத்து இரசாயன போஷனைகளும் அழிந்துபோதலாகும்.

வைக்கோல் இடவேண்டிய மிக உகந்த முறை.

வைக்கோல் மண்ணுடன் சேர்க்கக் கூடிய முறைகளாவன.

* நேரடியாக மண்ணுக்கு இடுதல்.
* சிறு துண்டுகளாக்கி மண்ணுக்கு இடுதல்.
* மூடு பொருளாக மண்ணுக்கு இடுதல்.
* சிறிதளவு உக்கிப்போன வைக்கோலை (வயலில் அல்லது வயலுக்கு வெளியே) மண்ணுக்கு இடுதல்.
* கமப் பகுதியில் மண்ணைப் பண்படுத்தல் (வயலுக்குள்ளேயே கொம்போஸ்ட் தயாரித்தல்).

இந்த முறைகள் மத்தியில் வயலில் இடத்துக்கிடம் சிறு குவியல்களாக சேர்த்து வைத்திருக்கும் வைக்கோலை, சிறிதளவு உக்கிப் போனவுடன் மண்ணுடன் கலத்தல் மிகவும் செயல்படுத்தக் கூடிய முறையாகவிருப்பதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையுமாகும். இருப்பினும் விவசாய களங்களில் தொடர்ச்சியாக எட்டு போகங்கள் நடாத்தப்பட்ட நீண்ட கால ஆய்வின் மூலம் தெரிய வருவதாவது மேல் கூறிப்பிட்ட எந்தவொரு முறையைக் கையாண்டாலும் விளைச்சலில் எந்தவொரு மாற்றமும் ஏற்பட மாட்டாது என்பதாகும். பொட்டாசியத்தின் அளவும் அதிகரித்துள்ளது என்பது தெரியவந்துள்ளது.

வைக்கோலுக்கு தீ வையாது வயலுக்கு பசளையாக்கிக் கொள்வோம்.

எந்தவொரு நிலத்தையும் தொடர்ச்சியாக மிக நீண்ட காலம் பாவித்தல் மற்றும் பயிரிடுதல் போன்றவற்றினால் அந் நிலத்தின் மண் செழிப்பற்றுப் போகும் என்பது உண்மை. காரணம் நாம் நிலத்திலிருந்து பெற்றுகொள்ளும் அளவிற்கு நிலத்திற்கு இடாததினாலாகும். மண் செழிப்பற்ற வயல்கள் பாலடைந்து, பஞ்சம் ஏற்பட்டது பற்றி புராதண அனுராதபுர குடியேற்றங்கள் அழிவுக்கு உள்ளாவதற்குக் கூட காரணமாக அமைந்தது.

இன்று வயல்களில் விளைச்சளைப் பெற்றதன் பின் வெறுமனே மண் திறந்து விடப்படுகின்றது. களத்திலோ அல்லது வயலிலோ மீதியாகும் வைக்கோல் பற்றி யாரும் கவளைப்படுவதில்லை. சிலர் அதை வயலிலோ அல்லது களத்திலோ தீயிட்டு எரித்துவிடுகிறார்கள். அதனால் மண்ணுக்கு செழிப்பூற்ற நினைக்கின்றார்கள். ஆனால் நிகழ்வது என்னவெனில் வைக்கோல் சாம்பல் காற்றாலடித்து செல்லுதலும், அதன் பிறகு வரும் மழையினால் கழுவுண்டு போதலுமாகும்.

தற்போது எமது வயல்கள் போன்று வீட்டுத் தோட்டங்களும் கிருமி நாசினி இரசாயனத்தால் குளிப்பாட்டப்பட்டு அவை மரண அச்சுறுத்தலுக்கு பாத்திரமாக்கப்பட்டுள்ளது. தற்போது ஹம்பாந்தோட்ட மற்றும் புத்தளத்தில் பாரியளவிலான பயிர்ச் செய்கை நிலங்கள் பாலைவனங்களாகிவருவதுடன் ஏனைய பிரதேசங்களில் விவசாய நிலங்களும் மிகவும் அண்மையில் அந் நிலைக்குள்ளாக இடமுண்டு.

எமது அன்னையாகிய பூமி மற்றும் மரம் செடிகளுக்கு உள்ள உற்பத்தித் திரன், களைகொல்லி, பூச்சிகொல்லி மற்றும் இரசாயன பசளை பாவிப்பின் மூலம் குறைக்கப்பட்டு வருகின்றது. விவசாயத்திற்கு குறிவைக்கப்பட்டுள்ள இப் பயங்கர மரண அடி விவசாயிகள் போன்று நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று கன காலமாகின்றது. நாட்டின் சனத்தொகையில் ஒவ்வொரு 10 பேரிலும் ஒருவர் சீனி வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு 5 பேரிலும் ஒருவர் மன நோயுக்குள்ளாகியுள்ளார். பூச்சிகொல்லி விஷமாதல் வருடத்திற்கு 20.000 மாகும். மரணம் 4000 மாகும்.

> “வயலின் மண்ணை மீள செழிப்புறச் செய்து உயிர் கொடுக்கும் பிரதானமான முறையாக தற்போது எரியப்படும் மற்றும் தீயிட்டு எரிக்கப்படும் வைக்கோலை பாவிப்பது மிகவும் பயனுள்ள செயலாகும்.”

இற்றைக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நச்சுகளினால் கிருமிகள் உபத்திரம் இல்லாமல் போனதா? களைகள் குறைந்துள்ளனவா? மண் செழிப்புற்றுள்ளதா? இந்த கேள்விகளுக்கு பதில் முதலாவதாக, இரண்டாவதாக, மூன்றாவதாக, இல்லை, இல்லை, இல்லை என்பதாகும்.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாத பீடைகள் தற்போது பயிர்ச் செய்கை காணிகளை ஆக்கிரமித்துள்ளன. அறிக்கையிடப்பட்டுள்ள கிருமி இனங்களின் எண்ணிக்கை 263 ஆகும்.

இலங்கையின் வயல்களில் 'நெற்பயிருக்கு பாதிப்பை ஏற்படத்தும்' என்று கூறப்படும் 6 பூச்சிகள் இனங்கள் மாத்திரமே உள்ளன. இவற்றை உணவாக உற்கொள்ளும் 27 உயிரின வகைகள் வயலின் அருகாமையில் வாழுகின்றன. நச்சு விஷங்களைப் பாவித்து நாம் எமக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாத, மாறாக எமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் உயிரினங்களை உற்கொண்டு எமக்கு சேவை புறியும் இவ் 27 உயிரினங்களுடன் கிருமி இனங்கள் 33 ஐ அல்லது 34ஐ நேரடியாக கொன்றுவிடுகின்றோம். அதைத் தவிர நுண்ணுயிர்களையும், புழுக்களையும், விவசாய நிலத்தில் வாழும் பல் வகையான பறவைகளையும் முழுமையாக கொன்றுவிடுகின்றோம். அத்துடன் மிருகங்கள் உணவாக உற்கொள்ளும் பெருந் தொகையான புல்பூண்டுகள், செடி வகைகளை கொன்றுவிடுகின்றோம். இவ்வாறு இடப்படும் நச்சுகளினால் வாய்க்கால் மற்றும் கால்வாய்கள் அறுவிகளில் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த மீன்களை அழித்துவிடுகின்றோம். நண்டு, ஹெந்தில்லா, வெளிகோவ்வா போன்ற சிறிய மீன் இனங்கள் இன்று எமது சிறிய வயல்களில் உள்ளனவா? சிந்தித்துப் பாருங்கள், நாம் செய்துகொண்டுள்ளது எவ்வளவு பெரிய தவறு என்று? எமது முதாதையர்கள் எமக்கு உயிருள்ள நிலத்தை உரிமையாகத் தந்துள்ளனர். அது தற்போதைய 'கொளை கார விவசாயத்தின்' மூலம் பலிக்குள்ளாக்கப் பட்டுள்ளது. எமது நிலம், நீர் உற்பட வளங்களை அதிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுவது எமது பொறுப்பாகும்.

வைக்கோலை எரித்தல் தேசிய குற்றமாகும்.

# பொது மக்கள் மனு

## சுனாமியினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவோம்! மக்களினால் நிராகரிக்கப்பட்ட "இலங்கையை மீட்டெடுத்தல்" திட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டாம்!

சுனாமிப் பேரலை 40 ஆயிரம் உயிர்களைப் பலியெடுத்ததுடன், 8 இலட்சம் மக்களை அகதிகளாக்கியது. இலங்கை மற்றும் உலகம் பூராவுமுள்ள மக்கள் உள்ளார்ந்த உணர்வுடன் தயங்காது உதவி வழங்கினர். சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பெருந் தொகையான பணம் கிடைத்தது. சுமார் நான்கு மாதங்கள் கழிந்துள்ள போதிலும் அநேகமானவர்கள் இன்னல்கள் மத்தியில் முகாம்கள் மற்றும் வெளியிடங்களில் துயருருகின்றார்கள். போதுமானளவு தகுந்த உணவு இல்லை. பிள்ளைகள் மற்றும் தாய்மார்களுக்குக் கூட தேவையான போஷாக்கு இல்லை. தேகாரோக்கிய நிலை அபாயகரமானது. தேவையான பாதுகாப்பு இல்லை. நிரந்தர இருப்பிடம் தொடர்பாக நம்பிக்கையில்லை. கூடாரங்களில் வாழ முடியாமலிருக்கின்றது. அவை மழை பெய்யும் போது நீரால் நிரம்புகின்றன. மழையில்லாக் காலங்களில் சுருங்கிவிடுகின்றன. குடி நீரைப் பெற்றுக்கொள்ளுதல் பிரச்சினையாகவுள்ளது. இவையனைத்திற்கும் மேலாக வாழ்வாதாரத்தை இழந்தல் மற்றும் அகதி நிலை நிரந்தரமாகியுள்ளது. எனவே அம் மக்களுடைய வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பது எவ்வாறு? எங்கே? என்று இன்னும் நிச்சயமில்லை. அது பற்றி எவ்வித கருத்தோ திட்டமோ இல்லை. இவை அனைத்திற்கும் பிரதான காரணம் அரசின் திட்டம் மற்றும் நோக்கு என்பனவாகும். நிவாரண உதவியாகக் கிடைத்த வளங்களை அம் மக்களுக்கல்லாத வேறு திட்டங்களுக்காகப் பாவிப்பது தவறு. இது சாபத்திற்குரிய செயலாகும்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான உரிய திட்டத்திற்குப் பதிலாக அரசாங்கம் பாரிய வியாபார ஆதிக்குமுள்ளவர்கள் குழுவொன்றை "நாட்டை கட்டியெழுப்பும் செயலணி" யாக நியமித்து அனைத்தையும் அவர்களுக்கு ஒப்படைத்துள்ளது. அவர்கள் தயாரித்த திட்டம் "இருபத்தியோராம் நூற்றாண்டின் கனவொன்றை நனவாக்கிக் கொள்ளக்கூடிய நவீனமயமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புதலை" நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு இன்னுமொரு அழிவுக்குரிய சுனாமியாக அமையும்.

அதன் மூலம் இலட்சக் கணக்கான மீனவர்கள் கரையோரம் மற்றும் கடல் வளங்களிலிருந்து விரட்டியடிக்கப்படுவர். உல்லாசப் பிரயாண ஹோட்டல் மற்றும் பாரிய மீன் நிறுவன உரிமையாளர்களுக்கு அவை கையளிக்கப்படும்.

அதனால் மீனவ சமூகம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் அழிவுக்குள்ளாவது நிச்சயம்.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கெனக் கிடைத்த நிதி மற்றும் உலக நிதி நிறுவனங்களிடமிருந்து எடுக்கும் கடன் உட்பட 200 கோடி டொலர்களை அரசாங்கம் செலவளிக்கப் போகின்றது.

சுனாமியினால் பாதிப்புக்குள்ளான அனைத்து மக்களும் அவர்களுடன் சகோதரத்துவத்துடன் இணைந்துள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, இத் திட்டத்தினை நிராகரிக்கவும், சுனாமியினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நீதியைக் கோரி போராடுவதற்கான காலம் உருவாகியுள்ளது.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கெனக் கிடைத்த நிதி மற்றும் வளங்களின் உண்மையான உரிமையாளர்கள் அவர்களேயாவர். அவற்றை எவ்வாறு பாவிக்க வேண்டும் எனத் தீர்மானிதல் அவர்களுக்குள்ள உரிமையாகும்.

எனவே நாம் கீழ்க் குறிப்பிடும் உரிமைகளை வேண்டி கோருகின்றோம்.

1: மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும், பலவீனமடைந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் மிகப் பரந்த செயற்திறன் மிக்க பொறிமுறையை உடனடியாகத் தயாரிக்க வேண்டும். குழந்தைகளுக்கு போதியளவு போஷாக்கைப் பெற்றுக்கொடுப்பதுடன் கல்வி, உகந்த வீடு, தேகாரோக்கிய வசதிகள், பெண்களின் விஷேட தேவைகள் மற்றும் பாதுகாப்பை வழங்க வேண்டும். வாழ்க்கையை மிக நல்லதொரு நிலையில் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அனைத்தையும் உடனடியாக வழங்க வேண்டும். இதற்காக தேவைக்கும் மேலதிகமான வளங்கள் கிடைத்துள்ளன. இதனை வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கில் வாழும் சகல இன மக்களுக்கும் சமமான முறையில் வழங்கப்பட வேண்டும்.

2: கரையோரம் மற்றும் கடல் மீனவ மக்களின் வரலாற்றுமிக்க பாரம்பரியச் சொத்தாகும். அது உறுதியாக்கப்பட வேண்டும். உல்லாசப் பிரயாணம், ஹோட்டல்கள் மற்றும் பாரிய மீன் வியாபாரத் தொழில்களின் நிமித்தம் அவர்களை விரட்டியடிப்பதற்கு எவ்வகையிலும் இடமளிக்கக் கூடாது. எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விபத்துக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுவது எவ்வாறு? என்பதை அம் மக்களிடம் விசாரித்தே தீர்மானிக்க வேண்டும். உல்லாசப் பிரயாண வியாபாரத் துறை உரிமையாளர்களிடம் விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளக் கூடாது.

3: சுனாமியின் காரணமாக புலம்பெயர்ந்த அனைவருக்கும் தாங்கள் குடியிருந்த இடங்களுக்குச் செல்லும் உரிமை உண்டு. குடியமரும் இடம், வீடுகளின் தன்மை, தேகாரோக்கிய வசதிகள், சுகாதார மற்றும் கல்விச் சேவைகள் போன்றவற்றை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியது எவ்வாறு? என்று அம் மக்களின் விருப்பு மற்றும் உடன்பாட்டின் நிமித்தம் மாத்திரமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

4: யோரினால் அகதிகளாகி புலம்பெயர்ந்த மக்கள் சுனாமியினாலும் புலம்பெயரச் செய்யப்பட்டுள்ளனர். ஏனைய விபத்துக்களினால் புலம்பெயர்ந்த மக்களையும், விஷேடமாக 15 வருட காலமாக அகதி முகாம்களில் வாழும் – போரினால் புலம்பெயர்ந்த மக்களையும் சமமாகக் கருதி அவர்களின் வாழ்க்கையை மீண்டும் புனரமைக்க வேண்டும். இதற்காக வட கிழக்குப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்டுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற வேண்டும்.

5: சுனாமி ஏற்பட்டு மூன்று மாதங்கள் கழிந்துள்ள போதிலும் அவசர காலச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்துவது ஏன்? நிச்சயமாக அது மக்களின் நீதியான கோரிக்கைகளை மூடி மறைப்பதற்காகவே என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனவே நல்லாட்சிக்குப் பாதகத்தை ஏற்படத்தும் அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும்.

6: வர்த்தகர்களைக் கொண்ட செயலணிக்குப் பதிலாக மக்களின் "திட்ட அமைப்பு ஆணைக் குழுவொன்றை" ஆரம்பிக்க வேண்டும். அந்த ஆணைக் குழு பாதிப்புக்குள்ளான பிரதேசம் மற்றும் மக்களைக் கட்டியெழுப்புதல் தொடர்பான நிபுணத்துவம் மற்றும் அனுபவம் உள்ளவர்களடங்கியதாக இருப்பதோடு பாதிப்புக்குள்ளான மக்களின் கருத்துக்களை விசாரித்து அம் மக்களின் தேவைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கான விதிமுறையொன்றினை ஆரம்பிக்க வேண்டும்.

7: அரசுக்கும் மற்றும் நாட்டிற்கும் கிடைத்த நிதியத்தை பாதிப்புக்குள்ளான மக்கள் உகந்ததெனத் தீர்மானிப்பதற்கு இணங்க செலவு செய்யவேண்டும். அம் மக்களுடன் கலந்தாலோசிக்காது எவ்வித கடனையும் பெற்றுக் கொள்ளக் கூடாது. அரசாங்கத்திற்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் கிடைத்த நிதி தொடர்பான சகல தகவல்களையும் அரசினால் ஒதுக்கப்படுகின்ற நிதி தொடர்பான விபரமுள்ள தகவல்களையும் பெற்றுக் கொள்ளும் உரிமம் அம் மக்களுக்கு உரித்தானதாக இருக்க வேண்டும். அதற்கான விதிமுறைகளை அமைக்க வேண்டும்.

விசாரனைகள்:

தேசிய வளங்களையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஒன்றியம்

1151/58ஏ, கோட்டே வீதி, ராஜகிரியா, இலங்கை.
தொ.பே./ தொலை நகல் (+94) 40114407663
மின்னஞ்சல்: monlar@sltnet.lk – இணையம்: http//www.geocitieses.com/monlarslk

30/4 (1/1), உஸ்வத்த மாவத்த, எதுல் கோட்டே, இலங்கை.
தொ.பே./ தொலை நகல்: (+94) 112865084,
மின்னஞ்சல் sasthri@sltnet.lk

10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு, இலங்கை.
தொ.பே./ தொலை நகல்: (+94) 31 4870658







# அதி வேக நெடுஞ்சாலைகள் !!!

# சுதேசிய தேவைகளுக்காகவா?

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி காலத்தில் முன்வைக்கப்பட்ட "இலங்கையை மீட்டெடுத்தல்" என்ற வேலைத்திட்டத்தில் எமது நாட்டில் நிர்மாணப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள அதி வேக நெடுஞ்சாலைகள் "ஆசிய பசுபிக் வலய ஆணைக்குழு சபை" யின் மூலம் திட்டமிடப்பட்ட ஆசிய பசுபிக் நெடுஞ்சாகைளகளுக்கு பொருத்தமான முறையில் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கை அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பாக 1999 – 12 – 16 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசு கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் வறுமை குறைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக நெடுஞ்சாலை நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்கென்று ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன் கோரப்பட்டதற்கிணங்க இக் கடன் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (கடன் ஒப்பந்த உப பிரிவு இல. 1 இன் பிரகாரம்) இருப்பினும் இக் காலகட்டத்தில் எமது நாட்டின் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் எவருமே வறுமை ஒழிப்பிற்காக அதி வேக நெடுஞ்சாலைகள் அவசியமென்ற கருத்தை முன்வைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சி காலத்தின் உலகமய சர்வதேச பொருளாதாரக் கொள்கையின் ஒரு கட்டமாக இது அமைந்துள்ளது. எமது நாட்டில் அதிவேக நெடுஞ்சாலைகள் இல்லாத குறைபாடு எவ்விதத்திலும் இயந்திரத் தொழில் அல்லது விவசாயத் தொழில் துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இத் துறைகள் அபிவிருத்தியடையாதிருக்கக் காரணம் சரியான தேசிய கொள்கைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இல்லாமையே. உகந்த தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நாட்டின் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமேயாயின் தற்போது இருக்கின்ற நெடுஞ்சாலைகள் போதுமாகும்.

> "உத்தேசிக்கப்பட்டுள்ள பல அதிவேக நெடுஞ்சாலைகளின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, தென்னிலங்கை அதிவேக நெடுஞ்சாலைக்கு செலவிடப்படும் கடன் 10,26100 அமெரிக்க டொலர்களாகும். (பத்து இலட்சத்து இருபத்தி ஆராயிரத்து நூறு)"

நாட்டின் தேசிய கடன் சுமை அதிகரிப்பு

உத்தேசிக்கப்பட்டுள்ள பல அதிவேக நெடுஞ்சாலைகளின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, தென்னிலங்கை அதிவேக நெடுஞ்சாலைக்கு செலவிடப்படும் கடன் 10,26100 அமெரிக்க டொலர்களாகும். (பத்து இலட்சத்து இருபத்தி ஆராயிரத்து நூறு) இவ்வாறு அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிப்பதற்கு எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் கடனுடன் தேசிய கடன் பலுவையும் சேர்த்து இந் நாட்டு மக்களே திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். இது மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகும்.

சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் அந் நாடுகளின் அபிவிருத்திக்காக எம் நாட்டைப் பயன்படுத்துகின்றன என்பதே உண்மை.

எமது கோரிக்கைகளுக்கு இணங்கவே கடன் வழங்கும் நாடுகள் மற்றும் வங்கிகள் கடனை வழங்குகின்றன. அக் கடனை வட்டியுடன் சேர்த்து 25 அல்லது 30 வருடங்களில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் வழங்கும் போது விதித்த நிபந்தனைகளின் பிரகாரம் நிர்மாணத்திற்கான கொந்தராத்துக்களும் அந் நாடுகளுக்குச் சொந்தமான சர்வதேச நிறுவனங்களிடமே ஒப்படைக்கப் படுகின்றன. அந் நாடுகள் இவ்வாறு பாரிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். அத்தோடு அந்த நாடுகளில் தயாரிக்கப்படும் கனரக இயந்திரங்களும் எமக்கு விற்கப்படுகின்றன. அந் நாடுகளின் உற்பத்திப் பொருட்களான சீமெந்து,


இரும்பு உட்பட மேலும் தேவையான பொருட்களையும் நாங்கள் விலை கொடுத்து வாங்க வேண்டி நேரிடுகின்றது. தற்போது எமது நாட்டு தொழிலாளர்களினது உழைப்பையும் குறைந்த விலையில் இந் நாடுகள் பெற்றுக் கொள்ளுகின்றன. இறுதியில் எமது நாட்டுக்கு மிஞ்சுவது அதிவேக நெடுஞ்சாலையொன்று மாத்திரமேயாகும்.

ஏற்படக் கூடிய சுற்றாடல், பொருளாதார மற்றும் சமுதாய அழிவுகள்.

எமது நாட்டில் தற்போது நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கொழும்பு – மாத்தறை, கொழும்பு – கட்டுநாயக்க, கொழும்பு சுற்று வட்டப் பாதை என்பவைகளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். கொழும்பு – மாத்தறைப் பாதை ஆயிரக்கணக்கான விவசாயிகள் வாழும் பிரதேசத்தின் ஊடாகச் செல்லுகின்றது. கொழும்பு – கண்டிப் பாதையும் அவ்வாறே. இவ் இரண்டு பிரதேசங்களிலுமுள்ள சிறுசிறு மலைகள் வெட்டி தரைமட்டப் படுத்தப்படவும், ஆயிரக்கணக்கான வயல் காணிகள் உட்பட வீட்டுத் தோட்டங்கள் அழிக்கப்படவுமுள்ளன. இயற்கை வளங்களும், இலட்சக்கணக்கான மரம் செடி கொடிகளும் அழிக்கப்படவுமுள்ளன. இவ்வாறு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளும் மலைச் சாரல்களும் அழிக்கப்படுவதனால் ஏற்படக் கூடிய பாலைவன நிலையும், நீர்ப் போஷனைப் பிரதேச அழிவுகளும் அளவிட முடியாதவைகளாகும். 200 – 250 அடிகள் அகலம் கொண்ட மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை 120 கிலோ மீட்டர் நிலத்தைக் கொண்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கொழும்பு – கண்டி நெடுஞ்சாலையும் அவ்வாறே. இப் பாதைகளை நிர்மாணிப்பதற்காக அப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வயல் நிலங்களும் விவசாய நிலங்களும் வீடு வாசல்களும் அழிக்கப்படுகின்றன.

இரண்டு உயிர்களைப் பலியெடுத்த மணல் நிரப்பப்பட்ட கொழும்பு கட்டுநாயக்க நெடுஞ்சாலைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வீடு வாசல்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அத்தோடு நீர்கொழும்பு ஏரியின் ஒரு பகுதியும் அழிக்கப்படவுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கொழும்பு சுற்றுவட்டப் பாதைக்காக வேண்டி வீடு வாசல்கள், வீதிகள், தொழிற்சாலைகள் போன்றவை அழிக்கப்படவுள்ளன.

இவ்வாறு கண்களுக்கு எட்டாத கனவுலக அபிவிருத்திக்காக வேண்டி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உடமைகள் (பாரம்பரிய வீடு



வாசல்கள், வயல் நிலங்கள் மற்றும் இயற்கையான சுற்றாடல்) அழிவுற, மக்கள் சார்பானதோர் அரசாங்கம் இடமளிக்கக் கூடாது.

அதிவேக நெடுஞ்சாலைகள் பொதுமக்களுக்காகவா?

□ அதிவேக நெடுஞ்சாலைகளினுள் உட்பிரவேசிக்க தடைகள் போடப்படும். அதற்காக கட்டணம் அறவிடப்படும்.

□ இப் பாதைகளில் பயண வேகம் கிலோ மீட்டருக்கு 80 அல்லது அதற்கு அதிகமாகவிருத்தல் வேண்டுமெனவும் கூறப்படுகின்றது.

□ எமது நாட்டு வருமானத்தில் 80% த்தைச் சூறையாடும் 20% தினருக்கே இப் பாதைகளில் போக்குவரத்துச் செய்யக் கூடிய அதி நவீன வாகனங்களை விலை கொடுத்து வாங்க முடியும்.

□ செல்வந்தர்களால் மாத்திரமே இப் பாதைகளில் போக்குவரத்து செய்யக் கூடிய வசதியுண்டு.

□ இப் பாதைகளை பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வேண்டி எந்த வகையிலும் பயன்படுத்திக் கொள்ள முடியாது. இப் பாதைகளுக்காகப் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தும் பொதுமக்களுக்கு அவற்றில் காலடியெடுத்து வைக்கக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்க மாட்டாது.

□ நாட்டின் உற்பத்திப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு தற்போதுள்ள பாதைகள் போதுமானதாகும்.

□ கடந்த பல வருடங்களாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வரவு குறைந்துள்ளது. அவர்கள் உழைப்பை இலவசமான முறையில் சுரண்டுவதற்கு சந்தர்ப்பங்களுள்ள நாடுகளை நோக்கிச் செல்லுகின்றனர்.

□ எவ்வித உத்தரவாதமுமில்லாத வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக வேண்டி நாட்டு மக்களை கடன்காரர்களாக மாற்றுவது நாட்டு மக்கள் மேலுள்ள பற்றுள்ள செயலா?

மக்களை ஏமாற்றல், மக்களை தவரான வழியில் இட்டுச் செல்லல், உண்மைத் தகவல்களை மறைத்தல்.

எம் நாட்டு மக்கள் அதிவேகமாகப் பயணம் செய்வதற்கான பாதைகளுக்காக ஒருபோதும் கோரிக்கை விடுக்கவில்லை. அவர்கள் நித்தமும் வேண்டி நின்றது பொதுவான போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்யுமாறு மாத்திரமேயாகும்.

இருப்பினும் முன்னர் இருந்த போக்கு வரத்து வசதிகள் கூட படிப்படியாக அழிந்து போக வழி வகுக்கப்பட்டன. இன்று பொதுமக்களுக்கான போக்கு வரத்து சேவைகள் தனியார் துறையினர் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் அதிவேக பாதைகளுக்காக வேண்டி பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தைச் செலவு செய்து, அதிவேகப் பாதைகளின் மூலம் பொதுமக்களின் போக்குவரத்து வசதிகள் அபூர்வமான முறையில் அபிவிருத்தி செய்யப் படும் என்று ஊடகங்களின் மூலம் விளம்பரங்களும் செய்யப்படுகின்றன. இது பொதுமக்களை ஏமாற்றும் பாரதூரமான ஒரு நடவடிக்கையேயாகும்.

அத்தோடு நாம் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை போக்குவரத்துச் செய்ய அதிவேக பாதைகள் அவசியமெனப் பொதுமக்கள் கேட்கவுமில்லை. கோரிக்கை விடுக்கும் அளவுக்கு பொருட்களை கொண்டு செல்லல் மக்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கவுமில்லை. இந்நிலையில் மக்களின் வசதிக்காகவெனக் கூறி அதிவேக பாதைகளுக்காக நாட்டை கடனாலியாக்குவது தவரான செயலாகும். நாட்டில் விவசாயம் உட்பட ஏனைய உற்பத்தி பொருட்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தேசிய கொள்கைகள் கூட இல்லாமலிருக்கையில், பொருளாதார அபிவிருத்திக்கென்றும், வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கென்றும் அதிவேக பாதைகளை நிர்மணிக்கப் போவதாகக் கூறுவது பொதுமக்களை மாத்திரமன்றி சிந்தனைத் திறன் மிக்க புத்தி ஜீவிகளையும் கூட ஏமாற்றுவதற்கு மேற்கொள்ளும் முயற்சியென்றே கூற வேண்டும். உல்லாசப் பிரயாணத் துறைக்கு அதிவேக பாதைகள் அவசியமெனக் கூறுவதும் இன்னுமொரு பொய்யாகும். உல்லாசப் பிரயாணத் துறைக்கு வசதிகள் இருக்க வேண்டியது உண்மைதான். இருப்பினும் அவர்கள் இந்த சின்னஞ்சிறு தீவின் அழகை ரசிக்க வருபவர்களாக இருப்பதால் அவர்கள் எல்லோருமே அதி வேக பாதையில் பயணம் செய்ய வருபவர்களெனச் சுட்டிக்காட்டுவது இன்னுமொரு ஏமாற்றுச் செயலாகும். அவர்கள் ஒருபோதும் அதி வேக பாதை வசதிகளை வேண்டி நிற்கவில்லை.

மேலும் ஊடகங்கள் மற்றும் கருத்துறையாடல்கள் மூலம் நாட்டு மக்கள் மௌனமாக்கப்பட்டுள்ளனர். இதனால் நாட்டுக்கு ஏற்படக் கூடிய அழிவுகள் மற்றும் கடன் சுமை போற்ற தகவல்களை மக்களிடமிருந்து மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தங்கள் மற்றும் சுற்றாடல் அறிக்கைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அரசியல் வாதிகள் மற்றும் பல் தேசிய நிறுவனங்களின் மூலம் பயிற்சியளிக்கப்பட்டு கமிஷன்களைப் பெற்றுக்கொள்ளும் உயர்மட்ட அதிகாரிகளினால் வரையறுக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு வெளிப்படுத்தாது ஒழித்து மறைத்து திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

ஏமாற்றம், பலாத்காரம் போன்றவற்றைப் பயன்படுத்தி எதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்க முயற்சித்தல்.

கொழும்பு – நீர்கொழும்பு நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படும் பிரதேசங்களில் வசிக்கும் பெரும்பாலான குடிசை வாசிகள்

ஒன்று திரண்டு தமக்கு நேர்ந்துள்ள இவ் இக்கட்டான நிலைக்கு எதிராக எதிர்ப்பைத் தெரிவிக்க முன்வந்தனர். இறுதியில் இரண்டு உயிர்கள் பலிகொடுக்கப்பட்டன. இப்போது அவ் இடங்கள் கடல் மணலால் நிரப்பப்பட்டுள்ளன. அப் பகுதியிலுள்ள நீரோடு உப்பு கலவையடைந்திருப்பது இன்னோரு விடயமாகும். ஆயிரக்கணக்கான மீனவ மக்களின் தொழிலுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் நீர்கொழும்பு ஏரியின் ஒரு பகுதியும் நிரப்பப்படவுள்ளது. சுற்றாடலைப் பாதுகாக்கும் இயற்கை அமைவுகளில் ஒன்றான முத்துராஜவலையின் ஒரு பகுதியும் மணலால் நிரப்பப்படவுள்ளது. இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்த மக்கள் பயமுறுத்தல்களின் காரணமாக ஒதுங்கிவிட்டனர்.

கொழும்பு – மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை சம்பந்தமாக

கொழும்பு – மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை நடவடிக்கைகள் காரணமாக பாதிப்புக்குள்ளானவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இப்போது 5 வருடங்கள் பூர்தியாகிவிட்டன. ஆட்சிக்கு வந்த சகல அரசியல் கட்சிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புக்கள் மற்றும் நியாயமான விளக்கப்படுத்தல்களுக்கு எந்த வித தீர்வுகளும் கிடைக்க வில்லை. இதனால் நீதி மன்ற சட்ட ஆலோசனை உதவியைப் பெறச் சென்ற அம் மக்கள் மேலும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தது.

அதிகாரிகள் மற்றும் கொந்தராத்துக் காரர்களின் தேவைக்கேற்ப பாதையை மாற்றியமைத்து பலம் படைத்தவர்களுக்கு கூடுதலான நஷ்ட ஈடும் வறியவர்களுக்கு குறைவான நஷ்ட ஈடும் என்ற வகையில் அநீதியான முறை கையாளப்படுகின்றது. கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட நெடுஞ்சாலை அமைச்சைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் அப்பாவி மக்களின் நியாயமான எதிர்ப்புகளுக்கு எதிராக செயல்பட்டு பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர்.

அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்கு தமது காணிகளை கையளிக்க தாம் விருப்பமெனக் கையொப்பங்கள் பெறப்பட்டதாகவும், பின்னரே அது ஒரு ஏமாற்றச் செயலெனக் அறிந்துகொண்டதாகவும் மக்கள் கூறினர். இவ்வாறு பௌத்த பிக்கு ஒருவரைக் கூட ஏமாற்றியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

இதன் யதார்த்தத்தை பற்றி நன்கு அறிந்த ஒரு குழுவினர் தமது வீடு வாசல்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக வேண்டி எதிர்ப்பைத் தெரிவிகின்றனர். ஊடகங்களின் மூலம் அரச அதிகாரிகள் பொய்ப் பிரச்சாரங்களைச் செய்வதோடு பலாத்கார நடவடிக்கைகளின் மூலம் அவர்களை அடக்கவும் ஏமாற்றவும் முயற்சி செய்து வருகின்றனர்.

கொழும்புச் சுற்றுவட்ட மற்றும் கொழும்பு – கண்டி அதிவேக நெடுஞ்சாலை செயற்திட்டங்களின் மூலம் ஏற்படக் கூடிய தேசிய அழிவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு அமைப்புக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் அவற்றுக்கு எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை.

1. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலைச் செயற்திட்டம் எமது நாட்டின் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவியாக அமையாது, எனவே அதனை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

2. கொழும்பு – நீர்கொழும்பு, கொழும்பு – மாத்தறை அதிவேக பாதைகளுக்குப் பதிலாக குறைந்த செலவில் மக்களுக்குப் பிரயோசனமாகும் வகையில் நிர்மாணிக்கக் கூடிய மாற்றுப் பாதைகளைப் பற்றி ஆய்வு வேண்டும்.

3. தேசிய தேவைகளின் அடிப்படையில் கடனை வழங்கிய வங்கிகள் மற்றும் கொந்தராத்துக் காரர்களுடன் இராஜதந்திர முறையில் பேச்சுவார்த்தைகளை நடாத்தி கடனாகப் பெற்றுக் கொண்டுள்ள இப் பெரும் தொகையான பணத்தை தற்போது எமது நாட்டிலுள்ள அனைத்துப் பாதைகளையும் அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆதலால் அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான சட்டத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கையை இடை நிறுத்தி விட்டு அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாண வேலைகளையும் தடுத்து நிறுத்தி தற்போது சுமக்கும் கடன் சுமையை மேலும் அதிகரிக்கச் செய்யாமல் இந்தப் பணத்தை முக்கியமான தேசிய தேவைகளுக்காக வேண்டி பயன்படுத்துமாறு கௌரமாக வேண்டிக் கொள்ளுகிறோம்.

எப்பாவல போஸ்பெட் கனிய பாரைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கான அமைப்பு, அநேகமான தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் பல ஒன்றாக இணைந்து உருவான தேசிய வளங்களையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஒன்றியம் முன்னைய ஐக்கி தேசிய கட்சி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட, மக்கள் விரோத ''இலங்கையை மீட்டெடுத்தல்'' என்ற செயற்திட்டங்களுக்கு எதிராக ஒன்று திரண்டன. தொடர்ந்தும் பொருளாதார நலன்களுக்காக வேண்டியும் பொதுமக்கள் உரிமைகளுக்காக வேண்டியும் செயற்படும் எமது அமைப்பு அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிப்பு வேலைகள் சம்பந்தமாகவும் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவும். மேற் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனமெடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**சரத் பர்னாந்து**

# சிறு கமக்காரர் முகங் கொடுக்கும் பிரச்சினைகள்





சிக்கல்களின் தோற்றுவாய்

1960 களில் –கைத்தொழில் நோக்கிய கமத்தொழில் (பசுமைப் புரட்சித் தொழில்நுட்பப் பொதியின் அறிமுகம்)

1970 களின் பிற்பகுதி – பொருளாதார தாராள மயமாக்கல். (இறக்குமதிப் பாதுகாப்பின் நீக்கம், பாதுகாப்பு வலைகள், உத்தரவாத விலை முதலியவை. அத்துடன் ஏற்றுமதிக் கைத்தொழிலை நோக்கிய அதிகரிக்கும் போக்கு)

பிரச்சினைகள்

1: உற்பத்திச் செலவு உயர்வு

அ: உள்ளீட்டு செலவுகள் (விதைகள், உரங்கள், கிரிமிநாசினிகள், களை கொல்லிகள், பெற்றோலிய அடிப்படை இயந்திரங்கள், நீர்ப் பாசனத்திற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் முதலியவை).

ஆ: ஒவ்வொரு பருவத்தின் போதும் கொள்வனவு செய்யப்பட்டவை– மூலதனச் செறிவு.

இ: உள்ளீடுகள் இறக்குமதி செய்யப்பட்டன– எனவே விலை தொடர்ந்து உயர்ந்து சென்றது.

ஈ: பயிர்ச் செய்கையில் நட்டம்– பீடைகள் மாற்றமின்றி இருந்ததுடன் அவற்றின் தாக்கங்களின் வெளிப்பாடு.

2: சந்தை விலைகளின் வீழ்ச்சி

அ: தனி உற்பத்திப் பொருள் அறுவடையின் அதிகரிப்பு

ஆ: குறைக்கப்பட்ட தீர்வைகள் – மலிவான இறக்குமதிகள் காரணமாகக் கமக்காரர் சர்வதேசச் சந்தையுடன் போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இலங்கையில் மிளகாய்க்கான உற்பத்திச் செலவு (உ.ம்) ஒரு கிலோ 72 ரூபா

இந்தியாவில் ரூபா 20

இலங்கையில் உருளைக்கிழங்கு உ.செ 25 ரூபா

இந்தியாவில் ரூபா 2.30

மரபு வழியான உணவு உற்பத்தி இலங்கையில் வீழ்ச்சியடைந்து விட்டது. அத்துடன் 1985–1988 காலப்பகுதியில் இறக்குமதிகள் இரண்டு மடங்காயின. (ஐ.அமெ. 300 மில்லியன் டொலரிலிருந்து ஐ. அமெ. 600 மில்லியன் வரை அதிகரித்தது.


3 : இடைத்தரகர்


அ: கமக்காரர்களின் உற்பத்திக்குக் குறைந்த விலையைக் கொடுத்து அதே குறைந்த விலையில் நுகர்வோருக்குக் கொடுப்பதில்லை. நடுத்தரகர்கள் (சேகரிப்போர், மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர்) ஆகியோர் பெரும் பங்கை எடுத்துக் கொள்கிறார்கள்.


ஆ: இரு போக்குகள் இணைக்கப்பட்டன. இரு போக்குகளான உற்பத்திச் செலவும் சந்தைச் செலவும்

இடைத்தரகர்களின் பங்கினால் இணைக்கப்பட்டன. இடையில் கமக்காரர்கள் நசுக்கப்பட்டனர்.

மிளகாய் உற்பத்தியும் இறக்குமதியும்






4: சூழல் தாக்கம்

பல்லின உயிரினம்

அ: 120 பிரிவைச் சேர்ந்த 2800 பாரம்பரிய பயிர் வகைகள் இழக்கப்பட்டன.

ஆ: பல்லின உயிரினத் தன்மையின் இழப்பு.

விவசாய இரசாயனங்கள்

உரப்பயன்பாடு– நைத்திரிக் நைதரசன், அல்கா மலர்ச்சி ஈரல் சேதங்கள் அதிகரித்த தாக்கங்களின் வெளிப்பாடு. பீடைகளின் இயற்கை எதிரிகளும் இரை கௌவிகளும் அழிக்கப்பட்டன. இயற்கை வட்டங்கள் பாதிப்புற்றன. பீடைகளினதும் களைகளினதும் எதிர்ப்பாற்றல்கள் தோற்றம் பெற்றன.

மண் தரங் குறைதல் மண் வளத்தின் இழப்பு – உயர்ந்தளவு மண்ணரிப்பு.

மண் சேதனப் பொருள்களும் நுண் போசனைப் பொருள்களும் குறைந்தளவில் காணப்படுதல்

மண் நுண்ணங்கிகளின் குறைவான செயற்பாடுகள்.
40% மான காணிகளின் மேற்புற மண்ணின் 5 மி.மீ. இழக்கப்பட்டுள்ளது.
பயிர் இழப்பு இலங்கையில் 44% மான காணிகளின் தரங் குறைந்துள்ளது.

அதிர்ச்சி தருபவை
அ: குறைந்த பல்லினத் தன்மை இலகுவாக இரசாயனப் பதார்த்தங்களைப் பாவிப்பதற்கும் சந்தைப்படுத்துவதற்குமாக ஓரினப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்படுகிறது.


இதனால் இலகுவாகச் சந்தை விலைகளின் தளம்பலாலும் காலநிலை பீடைகளின் தாக்கத்திற்கும் உள்ளாகின்றன.

ஆ: உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்கும் உறுதியற்ற சர்வதேசச் சந்தையில் தங்கியிருத்தல். (வெளிநாட்டு நாணய மாற்று வீதம் தீர்வைகள், யுத்தம், எரிபொருளின் விலைகள்).

கமக்காரர் பணப்பயிர்களின் ஏற்றுமதியில் தங்கியிருப்பார்களாயின் நிலைமை மேலும் மோசமடையும்.

5: அ: தேவையான அளவில் உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்கு வசதியற்றிருத்தல்.

பண்ணை அளவுடன் உற்பத்தி மாறும் விதம்




ஆ: பயிர்களைச் சிறந்த விலையில் விற்பனை செய்ய முடியாதிருத்தல் – நாளாந்த தேவைகளுடன் கடனும் செலுத்த வேண்டியிருத்தல்.

இ: இடைத்தரகர்களினால் தலையீட்டினால் கொள்வனவு செய்யும் வலு பெரிதும் பாதிக்கப்படுகிறது.

ஏன் சிறு கமக்காரர்கள் கருத்தில் கொள்ளப்படுகிறார்கள்

1: உற்பத்தித் திறன்
அ: பேரளவு உற்பத்தியில் கமம் செய்பவர்களை விட சிறு கமக்காரர்களின் அலகிற்கான உற்பத்தியின் அளவு அதிகம்.

ஆ: ஆசியா ஆபிரிக்கா இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளிற்கிடையேயான குறுக்கு நாட்டு ஆய்வுகளின் படி பெரிய அளவில் கமம் செய்பவர்களை விட சிறு கமக்காரர்களின் உற்பத்தியின் அளவு அதிகம்.

பண்ணை அளவுடன் உற்பத்தி மாறும் விதம்

– தனியாள் ஊக்குவிப்புக்கள் (கூலித் தொழிலாளர்களுக்கு எதிராக வெளியீட்டை

– அதியுச்சமாகக் குவதற்கு வரையறைகளை ஏற்படுத்தியது. அத்துடன் குடும்பத்தின் உழைப்பை முழுமையாக ஈடுபடுத்துகிறது.

– செறிவான பயிர்ச் செய்கை.

> கமக்காரர்களின் உற்பத்திக்குக் குறைந்த விலையைக் கொடுத்து அதே குறைந்த விலையில் நுகர்வோருக்குக் கொடுப்பதில்லை. நடுத்தரகர்கள் (சேகரிப்போர், பொதிசெய்வோர், மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர்) ஆகியோர் பெரும் பங்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

2: உணவுப் பாதுகாப்பு

உணவு விவசாய அமைப்பின் படி பொருளாதாரத் தாராளம் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு மீது பாதகமான ஒரு விளைவை ஏற்படுத்தியது.

காரணங்கள்

அ: வெளிநாட்டு தாக்கங்களுக்கு அகப்பட்டது (சர்வதேசச் சந்தை விலைத் தளம்பல்கள் வெளிநாட்டு நாணய மாற்று வீத வேறுபாடுகள். யுத்தம், உயர்ந்து செல்லும் பெற்றோலியப் பொருள்களின் விலைகள்)

– சர்வதேச நிலைமைகளில் தங்கியிருக்கக் கூடாது. சிறிய அளவிலான கமக்காரர்கள் அதிர்ச்சிகளுக்குப் பதிலளிக்க (ஈடு கொடுக்க) முடியுமாயின் இந்நாட்டு உணவுப் பாதுகாப்பை எதிர் கொள்வார்கள்.

– இன்று வலியுறுத்தப் படுபவை தேசிய உணவுப் பாதுகாப்புத் தந்திரோபாயங்களும் உணவுக் கையிருப்புக்களும் ஆகும். அதிகமாக வலியுறுத்தப்படுபவை உள்ளூர் மற்றும் குடியிருப்பு மட்ட உணவுப் பாதுகாப்பும் தேசிய வள முகாமைத்துவமும். உள்ளூர் உணவுப் பாதுகாப்புக்கு சிறிய அளவிலான கமக்காரர்களின் உற்பத்தி உயிர் நாடி என்பது உணரப்படும் நிலை உயர்ந்து செல்லுகின்றது.

– உணவு விவசாய அமைப்பு சிறிய அளவு கமக்காரர்களின் உற்பத்தியையும் வருமான உருவாக்க நடவடிக்கைகளையும் ஆதரிக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தால் அதன் தேசிய உணவுத் துறை தந்திரோபாயத்தைப் பதிலீடு செய்துள்ளது.

– உள் நாட்டு உணவு உற்பத்தி அதிர்ச்சிகளிலிருந்தும் அழுத்தங்களிலிருந்தும் மீழ்வதை உறுதிப் படுத்த இயலும்.

– சிறிய அளவிலான கமக்காரர்களின் வாழ்க்கையோட்டத்திற்கான பாதுகாப்பும் கிராமியப் பொருளாதார வலிமையும் உணவுப் பாதுகாப்பிற்கான உயிர்நாடிகளாகும்.

அரசியல் உறுதிப்பாடு

1: பொருளாதார உறுதிப்பாடு
2: சமூக நல வளம் (இன்புற்றிருக்கும் நிலை)
3: சூழல் சற்றாடலில் நின்று நிலைக்கும் நிலை.

மூலம் : கலாநிதி லயனல் வீரக்கோன்
மொழி பெயர்ப்பு: வை. சியாமளா

# நவ தாராளவாதக் கொள்கையால் பயனடைவது யார்?



1980 களிலேயே பிரிட்டிஸ் பிரதமர் மார்க்ரெட் தட்சர் மற்றும் அமெரிக்க குடியரசுத் தலைவர் றொனல்ட் றீகன் போன்றோர் முதலாலித்துவத்திற்கு மாற்று எதுவுமில்லை என்ற முழக்கத்தை முன்வைத்து வந்தனர். 1989 இல் பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதற்கும், 1990 இல் சோவியத் ஜூனியன் தகர்ந்து வீழ்ந்ததற்கும் பிறகு இந்த முழக்கத்தின் மற்றுமொரு வெளிப்படாக "உலகமயமாக்கல்" என்ற சொல்லாடல் பரவத் தொடங்கியது.

உலகமயமாக்கல் என்பது "புதிய தாராளமயம்" என்று கருத்து நிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதனை புதிய பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரிலும் அழைக்கின்றார்கள். எவ்வாறாயினும் நவீன சமுதாயத்தில் பொருளாதாரப் பாத்திரம் எதனையும் அரசு வகிக்கக் கூடாது என்பது தான் "புதிய தாராளமயத்தின்" சாரம். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஏற்பட்டுவரும் பொரளாதார சீர்திருத்தத்தை இந்தப் பின்னணியில்தான் புரிந்துகொள்ள வேண்டும். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், பொருளாதார சீர்திருத்தம் போன்ற சொல்லாட்சிகள் இலங்கை பற்றிய பொய்யான கணிப்பை, பிம்பத்தை ஊடகங்கள் மூலம் பரப்பி வருகின்றன.

"எவ்வாறாயினும் நவீன சமுதாயத்தில் பொருளாதாரப் பாத்திரம் எதனையும் அரசு வகிக்கக் கூடாது என்பது தான் "புதிய தாராளமயத்தின்" சாரம். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஏற்பட்டுவரும் பொரளாதார சீர்திருத்தத்தை இந்தப் பின்னணியில்தான் புரிந்துகொள்ள வேண்டும். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், பொருளாதார சீர்திருத்தம் போன்ற சொல்லாட்சிகள் இலங்கை பற்றிய பொய்யான கணிப்பை, பிம்பத்தை ஊடகங்கள் மூலம் பரப்பி வருகின்றன."

அறிவியல் தொழில்நுட்பத்திற்கு செலவிடும் அளவுக்கு வறுமையால் விவசாயிகள்

தற்கொலை செய்வதைத் தடுப்பதற்கு நிதி செலவழிக்கப்படுவதில்லை. நாட்டின் பாதுகாப்பு குறித்து அக்கறைப்படும் அளவிற்கு நாட்டு மக்களின் பாதுகாப்பு, பொது சுகாதாரம் குறித்துக் கவனம் செலுத்தப்படுவதில்லை.

வறுமை மிக கொடியதொரு வன்முறையாக இருப்பினும் வறுமை ஒழிப்புக் குறித்தும், பொருளாதார முன்னேற்றம் குறித்தும் ஆய்வு அரங்குகளில் புள்ளி விபரங்கள் வெளிப்படுவதோடு உருப்படியான செயல் திட்டங்கள் எதுவுமில்லை. விவசாயமே நாட்டின் முதுகெழும்பாக இருக்கின்ற போதிலும் நாட்டின் வளங்கள் பெரும்பாலும் விவசாயம் அல்லாத துறைக்கே பயன்படுத்தப் படுகின்றன.

இன்றைய ஏகாதிபத்திய நாடுகள் தங்களது சுரண்டலை அதிகரிக்க இலங்கை போன்ற வளரும் நாடுகளில் தங்களின் ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்த பல உலக அளவிலான அமைப்பு முறையை ஏற்படுத்தியுள்ளன. அவையே இன்றைய உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் மற்றும் "காட்" ஒப்பந்தங்கள்.

"புதிய ராஜதந்திரம், பலவீனமானவர்கள் மற்றும் சார்ந்திருப்பவர்கள் மீது பொருளாதாரப் பலத்தை பயன்படுத்தும் அடிப்படையில் உருவானது. தொழில் நுட்ப மேலாண்மை கொண்டு அடக்குவது. சர்வதேச தகவல் தொடர்பு அமைப்பின் மூலம் கலாச்சாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி சீரழிப்பது ஆகியவை இதில் அடங்கும".

– ஜுலியஸ் நைரே.

ஏழை நாடுகளுக்கு உதவி என்ற பெயரில் ஏழை நாடுகளை இன்னும் ஏழ்மையில் தள்ளும் திட்டம் இது. தேசிய எல்லையைக் கடந்து உலகமெங்கும் தங்கள் கிளைகளைப் பரப்பி அதிக மூலதனத்தைக் கொண்டுள்ள கம்பனிகளைப் பன்னாட்டு நிறுவனங்கள் என்கின்றோம். இந்த பன்னாட்டு நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் விலைகளை உயர்த்தி உலக சந்தையில் தங்களின் கட்டுப்பாட்டை நிறுவுகின்றன. நம் நாட்டை கொள்ளையடிக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடமளிக்கப் பட்டிருக்கிறது. இதனால் நம் பண்பாடு சீரழிந்து, மனிதாபிமானமற்ற ஒரு சமூகத்தை உருவாக்கி, நம் சொந்த மண்ணில் அடிமைகளாக நாம் வாழ வேண்டிய நிலைக்கு ஆளாக வேண்டிவரும்

பொருளாதாரத்தில் பின் தங்கிய வறிய நாடுகளுக்கு உதவ வேண்டுமென்ற அடிப்படையில் அமெரிக்கா உலக அளவில் உருவாக்கிய வட்டிக் கடைகளே உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியம். உலக வங்கி 1944 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தூண்டுதலால் உருவாக்கப்பட்டது. (சுமார் 190 உறுப்பு நாடுகள் உள்ளன) இயக்குனர் இது வரை ஒரு அமெரிக்கராகவே இருந்து வருகிறார். இதில் கடன் பெறும் நாடானது நிறுவன விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும். 'எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் எங்கள் பணம் உங்களுக்குக் கிடைக்காது.' இந் நிறுவனங்கள் விதிக்கும் நிபந்தனைகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் முதலாளித்துவ நாடுகளின் வர்த்தகத்திற்கும் சாதகமாக உள்ளன. உலக நாடுகளில் முதலாளித்துவ நாடுகள் தங்களின் பொருளாதாரத்தையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்த உருவாக்கப்பட்டதே சர்வதேச நிதி நிறுவனம் உலக வங்கி போன்றவைகளாகும்.

புதிய பொருளாதாரக் கொள்கையினால் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அதனால் கடன்கள் பெருகினவேயொழிய ஏழைகள் பயனடையவில்லை. அக் கடன் பாரமும் ஏழைகள் மேல் விழுந்தது. இன்று பன்னாட்டு நிறுவனங்கள் என்ற பெயரில் முதல் உலக நாடுகள் இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தங்கள் மூலதனத்தைக் குவித்து கொள்ளை இலாபம் அடிக்கின்றன. கடன் வாங்க வேண்டிய நெருக்கடியை உருவாக்கி அவற்றை உலக வங்கியின் கடன் வலையில் மாட்டி விடுகிறது.

இந்தப் போக்கு கண்மூடித்தனமானது என்பது அனைவரும் ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மை. இதனால் பயனடையப்போவது நாமல்ல.

இன்று இப் பன்னாட்டு நிறுவனங்களின் திட்டங்களை ஐந்து வகையாகக் கூறலாம்.

1. வளரும் நாடுகளின் பண மதிப்பைக் குறைத்தல். இதனால் இன்று இலங்கை நாணயம் ஒரு அமெரிக்க டொலருக்கு 100 ரூபாவாக மாறியுள்ளது.

2. தொழிலாளர்களுக்கு எக் காரணமும் காட்டாமல் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றல். இதனால் வேலைவாய்ப்பின்மையும், குறைந்த கூலி என்ற நிலையும் ஏற்படுகின்றது.

3. இலாபம் ஈட்டும் பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார்

துறைக்கு விற்றல். இத்திட்டத்தின் படி ஆயிரக்கணக்கானவர்கள் தொழிலிழக்க நேரிடுகின்றது.

4. கட்டுப்பாடுகளை நீக்குவது என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்ட "தாராளமயமாக்கல்" திட்டமாகும். இதனால் அந்நிய நாட்டின் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இருதியாக இலங்கையை உலக சந்தையுடன் இணைத்தல் என்பதாகும். இதனால் நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்கள் குறைக்கப்பட்டு வெளிநாட்டுப் பொருட்களுக்கு நம் நாடு நல்ல சந்தையாக மாறும்.

5. அந்நிய செலாவணி என்ற பெயரில் உணவுப் பயிர் உற்பத்தி குறைந்து பணப்பயிர்களின் உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்படப் போவது கிராமத்து விவசாயப் பெண்களாவர், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, இப் பன்னாட்டு நிறுவனங்களின் திட்டங்களைச் செயல்படுத்துவதினால் அதிகமானோர் வேலை இழக்க நேரிடும்.

இலங்கை, இன்று வளர்ச்சிக் கொள்கை என்று சொல்லி தன்னையே பணயம் வைத்து உலக நாடுகளுடன் சூதாட்டம் ஆடிக் கொண்டுள்ளது. இப்பணயத்தை ஈட்டவே சூதாட்டிகளான பன்னாட்டு நிறுவனம் மற்றும் உலக வங்கி உருவாகியுள்ளது.

இன்று மனித உயிரிழப்பும், பொருளாதார மற்றும் சமூக சீர்கேடுகளும் பெருகக் காரணமானது முதல் உலக நாடுகளே. நிதி நிறுவனங்களும் உலக வங்கியும் வழங்கும் கடன் உதவி சேவையின் அடிப்படையின்றி சதியின் அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது. கடன்களை வட்டியோடு திரும்பக் கட்ட வேண்டும் என்பதும் உண்மை.

இறக்குமதிக் கட்டுப்பாடு உலகத்திலிருந்து அகற்றப்பட்டு வருகின்றது. பல் வேறு பொருட்களுக்கு கடன் மற்றும் மானியங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. விளை பொருட்களின் விலையை, உலக சந்தையில் முதலிடம் வகிக்கும் நாடுகளே நிர்ணயிப்பதோடு அந்நிய முதலீட்டாளர்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மருத்துவம், விவசாயம், ஜவுளி ஏற்றுமதி, இறக்குமதி,வணிகம், உணவுப் பொருள் வினியோகம் மற்றும் சேவைத் துறைகளிலும் கூட பன்னாட்டு நிறுவனங்கள் தங்கு தடையின்றி முதலீடு செய்வதோடு நம்மை அவர்களுடைய பிடியின் கீழ் கொண்டுவந்துவிடும்.

முதலாலித்துவத்தின் கடைசிக் கட்டமான ஏகாதிபத்தியம் ஒரு உலக அமைப்பு என்பதையும், அதை உலக





> "இந்தப் போக்கு கண்மூடித்தனமானது என்பது அனைவரும் ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மை. இதனால் பயனடையப்போவது நாமல்ல."

முரண்பாடுகளின் மூலமாக மட்டுமே தோற்கடிக்க முடியும் என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**செ. இம்மானுவேல்**

# டெங்குக் காய்ச்சல்



## டெங்கு உயிர்க் கொல்லி துரிதமாக தலை தூக்குகின்றது.

பத்தாயிரத்திற்கும் மேலான டெங்கு நோயாளர்கள் பற்றி செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கையில் அப்பாவி மக்கள் பலரின் உயிர்களைச் சூரையாடும் அளவிற்கு இந்த நோய் இப்போது இலங்கைக்கு பாரியதொரு தேசிய அனர்த்தமாக மாறியுள்ளது. டெங்கு என்பது எங்களாலேயே வளர்த்தெடுத்துப் போஷனை ஊட்டப்பட்ட பயங்கரமான ஒரு உயிர்க் கொல்லியே.

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு சுத்தமான நீரிலேயே பரவுகின்றது. டொனிக் மூடியில், ஜோகட் கோப்பையில், மண் சட்டியில், வெற்று தயிர்ச் சட்டியில், செரட்டையில், பொலித்தீன் பேப்பரில், தெம்பிலி கோம்பையில், பூச்சாடியில், அழகுக்காக வளர்க்கப்படும் நீர்த்துளி தங்கக் கூடிய தாவரங்கள் என்பவற்றிலும் இந்த நுளம்பு பழுகி பெருகிவிடலாம்.

உங்கள் அயலவரின் மரணத்திற்கான குற்றவாளியாக நீங்கள் விரும்பகின்றீர்களா? நீங்கள் உங்கள் கைகளினாலேயே புதைத்து விட ஆயத்தமாவது உங்கள் குழந்தையையா?

இல்லை

நீங்கள் ஒரு பண்புள்ள மனிதராயின் அயலவரை, உங்கள் குழந்தையை உங்கள் கைகளினாலேயே புதைத்துவிடும் ஒரு மனிதனாக இருக்கமாட்டீர்கள். நீங்கள் பெறுமதியில்லாத, பிரயோசனமற்ற டெங்கு நுளம்பு பழுகிச் பெருகக் கூடிய அனைத்தையும் அழித்தொழிக்கும் பொறுப்பு மற்றும் கட்டாயம் தொடர்பாக உணர்ச்சிமிக்க ஒரு மனிதராவீர்.

### டெங்கு காய்ச்சல்

டெங்குக் காய்ச்சல் ஒரு வைரஸ்சின் மூலம் ஏற்படும் ஒரு நோயாகும். இந்த வைரஸ் ஈடீஸ் ஏஜிப்ட், எல்லோபிக்டஸ் எனும் இரண்டு வகையான நுளம்புகள் கடிப்பதின் மூலம் மனிதர்களுக்கு தொற்றுகின்றது. இந்த நுளம்புகள் அதிகளவில் பகல் காலங்களிலேயே மனிதர்களைக் கடிக்கின்றன. ஆதலால் உங்களது குழந்தையை பாடசாலையிலும், உங்களைக் காரியாலயங்களிலும் மற்றும் பயணங்களின் போதும் இந்த டெங்கு நுளம்பு கடிக்கலாம் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

### டெங்குக் காச்சலுக்கான அடையாளங்கள்.

கடும் காச்சல்
தலை வலி
உடம்பு வலி
வாந்தி
வயிற்று வலி

மேற் கூறிய அடையாளங்கள் மூன்று நாட்களில் குறைந்து சென்று நோய் குனமானதாகக் காட்டி நின்றாலும் சில நோயாளர்கள் டெங்கு குறுதிப் பெருக்கு காய்ச்சலுக்கும் உற்படலாம்.

### டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சலுக்கான அடையாளங்கள்

- தோலின் அடியில் சிறிய இரத்த (சிகப்பு) அடையாளம்
- கண் சிவத்தல்
- மூக்கினால் இரத்தம் கசிதல்
- மல, சலத்துடன் இரத்தம் வெளியாதல்.
- முரசினால் இரத்தம் வெளியாதல்
- வாந்தி அல்லது மலம் கருப்பு அல்லது செம்பட்டை நிறமாதல்

### *ஆபத்தான எச்சரிக்கை*

### டெங்கு அதிர்ச்சி

டெங்கு குருதிக் காய்ச்சல் திடீரெனா குறைந்து செல்லலாம். இருப்பினும் நோயாளி சுகப்படாமல் இருப்பாராகின் அது அதிர்ச்சியான சந்தர்ப்பமாக அமையலாம்.

### அதிர்ச்சிக்குள்ளான ஒரு நோயாளியின் அடையாளங்கள்.

- உடம்பு குளிர்ந்து போதல்

- உடல் வெளிரல்
- கலக்கமான நிலை
- நித்திரை வரும் நிலை
- மூச்செடுத்தல் மற்றும் நாடித்துடிப்பு வேகமாகுதல்

இந்த நிலை ஏற்படுமெனில் அது நோயாளியின் ஆபத்தான கட்டமாகும்.

மறக்க வேண்டாம்.

- காய்ச்சல் எடுத்ததும் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
- பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது ஓய்வெடுத்துக்கொள்ள வையுங்கள்.
- அதிகளவில் நீர் பானங்களைப் பருகக் கொடுங்கள்.
- அஸ்பிரின் அல்லது அஸ்பிரின் கலந்த மருந்து வகைகளைக் கொடுக்க வேண்டாம்.
- சிகிச்சை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் மேற் கூறப்பட்ட அடையாளயங்கள் உள்ளனவா என்பதைப் பற்றியும் கவனமாக இருங்கள்.
- எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆஸ்பத்திரியில் அல்லது தகுதியுள்ள மருத்துவர்களிடமிருந்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

டெங்கு நோயைத் தவிர்ப்பதற்கு இந்த ஆலோசனைகளைப் பின்பற்றவும்

- வெற்று டின்கள், போத்தல் துண்டகள், வெற்று தயிர் சட்டிகள், தேங்காய் மற்றும் தெம்பிலி கோம்பைகள், பொலித்தீன் உரைகள், மட்பாண்ட துண்டுகள், பீங்கான் துண்டுகள், பொலித்தீன் உரைகள் என்பவற்றை நீர் நிறம்பக் கூடிய இடங்களில் போடாதீர்கள். நொறுக்கி விடுங்கள். இல்லையேல் புதைத்து விடுங்கள்.
- நீர் தேங்கி நிற்கும் பூச் செடிகளை அகற்றி விடுங்கள்.
- வளவில் நீர் தேங்கி நிற்கும் இடங்களை அழித்துவிடுங்கள். சிறு காடுகளை துப்பரவு செய்யுங்கள்.
- வீட்டிலிருந்து அகற்றும் அழுக்குகளை பாதையில் போடாதீர்கள்.
- பூச் சாடிகள், எறும்பு பொறி என்பவற்றில் தேங்கியுள்ள நீரில் உப்பைக் கலந்துவிடுங்கள். சில தினங்களுக்கு ஒரு முறையேனும் நீரை அகற்றிவிடுங்கள்.
- நீர் சேகரிக்கும் பாத்திரங்களை மூடி வையுங்கள்.
- நாய்கள் மற்றும் பறவைகளின் தேவைகளுக்காக வைத்துள்ள நீர்ப் பாத்திரங்களையும் மூன்று தினங்களுக்கு ஒரு முறையேனும் அகற்றி விடுங்கள்.
- மழைப் பீலிகளினுள் நிரம்பியுள்ள இலை கூலங்களை நிரந்தரமாக அகற்றி விடுவதோடு தேங்கியுள்ள நீரையும் அகற்றி விடுங்கள்.

“ நுளம்புக் கொயில்களை எரித்தல் மருந்து வகைகளை தடவுவதல் புகை பிடித்தல் அல்லது மருந்து தெளித்தலின் மூலம் டெங்கு காய்ச்சலை இல்லாதொழிக்க முடியாது. ”

- கூரைகளின் மேல் நீர்த் தேங்கி நிற்கக் கூடிய அனைத்து பொருட்களையும் அப்புறப்படுத்துங்கள். முக்கியமாக டயர்களில் நீர் தேங்கி நிற்காதவாறு மணலை நிரைத்து வையுங்கள். இல்லாவிட்டால் டயர்களில் பொத்தலிட்டு வையுங்கள்.
- குப்பைகளை மூன்று நாட்களுக்கு ஒரு முறை எரித்துவிடுங்கள் அல்லது புதைத்து விடுங்கள்.
- பொலித்தீன் உரைகளை வெளியில் போடாதீர்கள்.
- வீடு, பாடசாலை மற்றும் தொழில் புறியும் இடங்களின் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருங்கள்.

எச்சரிக்கை

மேற் கூறப்பட்ட ஆலோசனைளைப் பின்பற்றி டெங்கு நுளம்புகள் பழுகிப் பெருகக் கூடிய இடங்களை வைத்திருக்கும் வீடுகள், தனியார் நிறுவனங்கள் உற்பட அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நீதி நேர்மையுடன் வாழும் மக்களுக்கு அன்பு செய்யும் நீங்கள் அது போன்ற இடங்கள் பற்றிய தகவல்களை பிரதேச சுகாதார அத்தியட்சகருக்கு அல்லது அருகாமையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அவர்களுக்கு அறிவியுங்கள்.

*ஏமாந்து விடாதீர்கள்*

நுளம்புக் கொயில்களை எரித்தல் மருந்து வகைகளை தடவுவதல் புகை பிடித்தல் அல்லது மருந்து தெளித்தலின் மூலம் டெங்கு காய்ச்சலை இல்லாதொழிக்க முடியாது. டெங்குவை இல்லாதொழிக்க முடிவது சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமேயாகும். இதனை உங்களது வாழ்க்கைக்கான நல்லதொரு சுகாதார பழக்கமாகக் கடைப்பிடித்துக் கொள்ளுங்கள். டெங்குவை இல்லாதொழிக்க முடியும் – இல்லாதொழிக்க வேண்டும்.



கோடை கொளுத்தத் தொடங்கிவிட்டது. நிழலுக்கு ஒதுங்க மரம் தேடி நாயாய் அலைய வேண்டியிருக்கிறது. கண்ணில் தென்படும் மரங்கள் கூட மூளியாகத்தான் காணப்படுகின்றன. சாலைகளை அகலப்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஏற்கனவே இருக்கும் மரங்கள் தான் அப்புறப் படுத்தப்படுகின்றன. அகலப் படுத்தப்பட்ட சாலைகளின் ஓரங்களில் அமைச்சர்களின் ஆசீர்வாதங்களுடன் மரம் நட விழாக்கள் நடக்கின்றன. வாய்க்கரிசியாய் சில நாட்கள் அம்மரங்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. பின் வரட்சிதான். மரக் கன்று வாடிக் கருகியதும் காவலுக்கு வைத்த வேலியும் காணாமல் போய்விடுகிறது.

நாமில்லாமல் கூட மரங்கள் இருக்க முடியும் ஆனால் மரங்கள் இல்லாமல் நாம் இருக்க முடியாது. குறிப்பாக வாகனம் மற்றும் தொழிற் சாலைகளினால் நச்சுக் காற்று சூழ்ந்திருக்கும் நகர் புறங்களில் மரங்கள் இன்றியமையாதவை. காசை முதலீடு செய்து எங்கோ தேக்கு வளர்த்துக் கொண்டிருப்பதை விடவும் நாம் வாழுமிடங்களில் மரங்களை வளர்ப்பது நமக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது.